281

மணி வாசகம்

5-ம் புத்தகம்

281
1-49
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1949
MADRAS
TB
031(5)
N49
89332

ஸ். ஷண்முகநாதன் & சன்ஸ்
யாழ்ப்பாணம்

மணி வாசகம்

ஐந்தாம் புத்தகம்

"சம்பந்தன்"

எஸ். எஸ். சண்முகநாதன் & சன்ஸ்
யாழ்ப்பாணம்

பொருளடக்கம்

பாடம்			பக்கம்
1.	கடவுள்	...	1
2.	மலர்கள்	...	3
3.	சூரிய தரிசனம்	...	6
4.	ஜலத்தில் கரைந்திருக்கும் உப்பு	...	7
5.	கர்ணன்	...	8
6.	ஊற்றுகள்	...	12
7.	நமது நாடு	...	15
8.	சிறு விதைக்குள் மரம் முழுதும்	...	17
9.	கவி அரசி சரோஜினி தேவி	...	19
10.	திமிங்கிலங்கள்	...	22
11.	வெந்நீரூற்றுகள்	...	26
12.	சோக்கிறற்றீஸ்	...	29
13.	பூர்வீக மனிதன்	...	33
14.	அதிசயமான மரங்கள்	...	36
15.	சிகிரியா	...	40
16.	நேபரும் டேகரும்	...	42
17.	பாலை நிலங்கள்	...	46
18.	பூர்வீக நாகரீகம்	...	50
19.	அசுரர்கள்	...	53
20.	ராஜாராம் மோஹன் ராய்	...	54
21.	ஜோன் ஒவ் ஆர்க்	...	58
22.	காப்பிப் பானம்	...	62
23.	மனுநீதி மன்னன்	...	65
24.	விஞ்ஞானிகள்	...	69
25.	வாழ்க்கை	...	72
26.	கோபால கிருஷ்ண கோகலே	...	73
27.	நாடு தேடிய வீரர்கள்	...	77
28.	ஒரு படி மாவு	...	81
29.	பாலொரு புறம் பயனொரு புறம்	...	85
30.	பொன்மொழிகள்	...	89
	1. சுயோதனன் சபையில் பாஞ்சாலி	...	93
	2. நன்னெறி	...	97

ம ணி வா ச க ம்

ஐந்தாம் புத்தகம்

1. கடவுள்

விதை வேர் கொம்பர்களிலிருந்து மரம் செடி கொடிகள் தோன்றுகின்றன. முட்டையிலிருந்து பூச்சி புழுக்கள் பறவைகள் பிறக்கின்றன. கருப்பையிலிருந்து விலங்குகள் ஜனிக்கின்றன; மனிதர்கள் ஜனிக்கிறார்கள். இவை எல்லாம் எப்படி உண்டாகின்றன? இவற்றின் ஆதிகாரணம் யாது?

எல்லாம் அந்தப் பரம்பொருளேயாகும்.

மரம் வளருகிறது; புழு நகருகிறது; பறவைகள் பறக்கின்றன; விலங்குகள் நடமாடுகின்றன. இப்படியே ஒவ்வொரு உயிரும் தொழில் செய்கிறது. ஒவ்வொன்றும் இப்படி இப்படித்தான் செய்யவேண்டும் என்று கட்டளை செய்தவன் யார்?

அந்தப் பரம்பொருளான கடவுளே எல்லாக் கட்டளைகளையும் செய்கிறன்.

மலர்களுக்கு அழகைத் தந்தவன் யார்? இனிய மணத்தைத் தந்தவன் யார்? வண்ணாத்திப் பூச்சிக்கு அழகாக வண்ணத்தைத் தீட்டி விட்டவன் யார்? மயிலுக்கு மரகதத் தோகையைக் கொடுத்தவன் யார்? குயிலுக்கு இன்னிசை பாடும் குரலைக் கொடுத்தவன் யார்? பருந்துக்கு வானக்கடலின் முகடு வரைக்கும் பறக்கிற சக்தியைக் கொடுத்தவன் யார்?

எல்லாம் அந்தத் தெய்வமே யாகும்.

நெருப்பைச் சுடச் செய்பவன் எவன்? தண்ணீரைக் குளிரச் செய்பவன் எவன்? காற்றை அடிக்கச் செய்பவன் எவன்? மழையை வர்ஷிக்கச் செய்பவன் எவன்?

அந்தக் கடவுளைத் தவிர வேறு யாரால் இவற்றைச் செய்ய முடியும்?

இனிமையான வசந்த காலத்தையும், கொடிய கோடை காலத்தையும், கொடுக்கும் பனிக் காலத்தையும், குளிரும் மழைக் காலத்தையும் மாறி மாறி வரச் செய்பவன் யாவன்?

சந்திரனையும் பூமியையும் மற்றும் கிரகங்களையும் சூரியனையும் படைத்து வெறும் வெளியில் நிலைத்திருக்கச் செய்பவன் யாவன்? வானமாகிய அளவில்லாத வெளியை வைத்து அதற்குள் எண்ணில்லாத நக்ஷத்திரங்களை எல்லாம் படைத்துவிட்டு ஒன்றை ஒன்று தீண்டாமல் ஓடித் திரியுங்கள் என்று கட்டளை செய்தவன் யாவன்?

அவனே அந்தப் பரம் பொருள்.

அவனுடைய சக்தியை மனிதர்களால் அளக்க முடியாது. நினைக்கவும் முடியாது. அவன் எப்படி இருப்பான் என்று சிந்திக்கவும் முடியாது.

அப்படியான அந்தக் கடவுளை நாம் மறந்திருக்கலாமா? மனிதர்களாகிய நாங்கள் அவனை மறந்துவிடுகிறோம். ஆனாலும் அவன் கோபிக்கிறதில்லை. அன்பே வடிவமான அந்தக் கடவுள் ஒருபோதும் கோபிக்க மாட்டான்.

வர்ஷிக்க

வினாக்கள் :

1. உலக உயிர்கள் எல்லாவற்றினதும் ஜனனத்தின் ஆதி காரணம் யாது?

2. பரம்பொருளின் சக்தியை மனிதர்களால் அளவிட முடியாது. ஏன்?

3. தன்னை மறந்து விடுகிறவர்களையும் கடவுள் கோபிக்கிறதில்லை. ஏன்?

2. மலர்கள்

இயற்கைத்தேவி ஒரு நாள் ஆனந்தமடைந்து மெல்லச் சிரித்தாள். அவளுடைய அழகான சிரிப்பு பூமியில் உதிர்ந்துதான் மலர்கள் ஆயின என்று சிலர் சொல்லுகிறார்கள். ஒருவேளை இதுதான் மலர்களின் சரித்திரமாக இருக்கலாம். வேறு எந்த வகையில் இருந்தாலும் மலர்களுக்கு இத்தனை அழகும் உயர்வும் கிடைத்திருக்க முடியாது. ஆனால் மலர்களிலிருக்கும் மணம் இயற்கைத் தேவியின் அந்தச் சிரிப்பில் இல்லையே! அப்படியானால் மலர்களின் கதை என்ன?

இந்தக் கதையில் கொஞ்சம் திருத்தமிருக்கிறது. இயற்கைத் தேவிக்கு எப்படி ஆனந்தம் வந்தது தெரியுமா? தெய்வம் அவளை முதலில் படைத்தது. சொல்லமுடியாத அழகோடு அவள் பிறந்தாள். தெய்வத்துக்கே தன் படைப்பில் சந்தோஷம் வந்து விட்டது.

தேவர்கள் பக்குவமாக எடுத்துச் சேர்த்துக் கொடுத்த வாசனைத் தைலங்கள் குடங்குடமாக அங்கே இருந்தன. அவற்றை எல்லாம் எடுத்துத் தெய்வம் இயற்கைத் தேவியின் மீது அபிஷேகம் செய்துவிட்டது. அப்போதுதான் அவளும் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, வாசனையும் அழகும் உள்ள மலர்களாகப் பூமி எங்கும் சிதறிவிட்டது!

இதுதான் மலர்களின் உண்மையான சரித்திரம்.

ஆனால் மனிதர்கள் இதை மறந்து விட்டார்கள். தெய்வம் உலகத்தைப் படைத்த காலத்துக் கதையல்லவா இது? கொஞ்சங் கொஞ்சமாக எப்படியோ இந்த மூட மனிதர்கள் மறந்துவிட்டார்கள். அதனால்தான் மலர்களைப் பறிக்கிறார்கள். பலவற்றை வைத்து ஒன்றாகக்

கசக்கிக் கசக்கிக் கட்டுகிறார்கள். அழுக்கு நிறைந்த தங்கள் தலைமயிரிலும், கழுத்திலும் சுற்றுகிறார்கள்.

சில குரங்கு மனிதர்கள் மலர்களைப் பறித்துத் தங்கள் மூக்கருகே கொண்டுபோகிறார்கள். கசக்கி வாயினுள்ளே வைத்துச் சிலர் தின்றும் விடுகிறார்கள்.

உண்மையில் மனிதர்களுக்கு மலர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அருமையான வயிர இரத்தினத்தைக் கோழிக்கு முன்னே போட்டால் அது என்ன செய்யும்? கொத்திப் பார்த்து விட்டு எறிந்து விடும். மழலையாகப் பேசும் இனிய கிளிப் பிள்ளையைப் பூனைக்கு முன்னால் விட்டால் பூனை சும்மா இருக்கிறதா? இரக்கமின்றி அப்படியே பாய்ந்து கொன்று தின்று விடுகிறது. அப்படித்தான் இந்த மனிதர்களும் மலர்களை அழித்து விடுகிறார்கள்.

மலரைப் படைத்த தெய்வமே மனிதனையும் படைத்திருக்கலாம். ஆனால் அந்த மலர்களைப் போற்றிக் கொண்டாடுகிற புத்தியையும் அவனுக்குள் வைத்துப் படைத்திருக்க வேண்டும். தற்செயலாக அந்தத் தெய்வம் அதை மறந்து விட்டது.

வினாக்கள் :

1. மலர்களைப் பற்றிய உண்மைச் சரித்திரம் என்ன?
2. மனிதர்கள் மலர்களுக்குச் செய்யும் குற்றம் என்ன?
3. இயற்கையின் மிகச் சிறந்த படைப்பு மலர்கள் என்றால் பொருந்துமா? காரணம் தருக.

3. சூரிய தரிசனம்



சுருதி யின்கண் முனிவரும் பின்னே
        தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமை யென்றேத்தும்
        பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்;
பரிதியே, பொருள் யாவிற்கு முதலே,
        பானுவே, பொன்செய் பேரொளித் திரளே,
கருதி நின்னை வணங்கிட வந்தேன்;
        கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே. 1

வேதம் பாடிய சோதியைக் கண்டு
        வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்;
நாத வார்கட லின்னொலி யோடு
        நற்ற மிழ்ச்சொ லிசையையுஞ் சேர்ப்பேன்;
காத மாயிர மோர்கணத் துள்ளே
        கடுகியோடும் கதிரினம் பாடி
ஆதவா, நினை வாழ்த்திட வந்தேன்
        அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே. 2

பாரதியார்.

4. ஜலத்தில் கரைந்திருக்கும் உப்பு

"உலகம் முழுவதும் பரவி இருக்கும் இந்தப் பொருள் எவ்வாறு மறைந்து போயிற்று?" என்று மகன் கேட்டான். அதற்கு உத்தாலகர் உபதேசித்த தாகச் சொல்லியிருப்பது தற்கால இரசாயன நூல் சோதனை முறையாகவே இருக்கிறது. மகனை ஓர் உப்புக் கட்டி கொண்டுவரச் சொல்லி, அதைத் தண்ணீரில் போடச் சொன்னார். பிறகு, "நாளைக் காலையில் வா" என்றார்.

மறுநாள் தகப்பனாரிடம் பையன் வந்து நின்றான். "நேற்றுத் தண்ணீரில் போட்ட உப்பைக் கொண்டுவா" என்றார். பையன் பார்த்தான். உப்பு எங்ஙனம் இருக்கும்? கரைந்து போயிருந்தது.

"ஐயா! உப்பு அழிந்து போயிற்று" என்றான்.

"தண்ணீரில் மேலே கொஞ்சம் எடுத்து அருந்து" என்றார்.

"உப்பாயிருக்கிறது" என்றான் மகன்.

"மத்தியில் அருந்திப்பார்" என்றார்.

"அதுவும் உப்பாகத்தான் இருக்கிறது" என்றான்.

"அடித்தண்ணீரைப் பார்" என்றார்.

அதை அருந்திப் பார்த்து அதுவும் அப்படியே இருப்பதாகச் சொன்னான்.

"கொட்டிவிட்டு வா" என்றார்.

மகன் கொட்டிவிட்டு வந்தபின் "உப்பு அழிந்து விட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை, எவ்வுருவாகவோ எங்கேயோ அது இருந்து கொண்டுதான் இருக்கிறது" என்றான்.

"அப்பனே! இவ்வாறே உலகம் முழுதும் பரம் பொருள் இருக்கிறது. கண்ணுக்குப் புலப்படாமல்,

அனைத்திலும் இருக்கிறது. அதுவே சத்து, அதுவே ஆன்மா, நீயும் அதுவே" என்றார்.

[உபநிஷதப் பலகணி]

வினாக்கள் :

1. உத்தாலகர் தன் மகனுக்கு எவ்வாறு உபதேசம் செய்தார்?

2. ஜலத்தில் கரைந்திருக்கும் உப்பைச் சுவைத்து அறியலாம், உலகம் முழுவதும் பரவியிருக்கும் பொருளை அறிவது எங்ஙனம்?

3. சத்தாகவும், ஆன்மாவாகவும், எல்லாமாகவும் இருக்க ஒரு பொருளால் எவ்விதம் முடிகிறது?

5. கர்ணன்

குந்திதேவி கன்னிப் பருவத்தில் பெற்றெடுத்த குழந்தைதான் கர்ணன். அவன் சூரியனது புத்திரன். கன்னிப் பருவத்தில் பெற்றதனால் அவமானம் உண்டாகுமே என்று குந்தி பயந்தாள். குழந்தை பிறந்ததும் ஒரு பேழையிலிட்டுக் கங்கையில் விட்டாள். ஒரு தேர்ப்பாகன் அவனைக் கண்டெடுத்து வளர்த்தான்.

பாண்டவர்களும், கௌரவர்களும் துரோணாச்சாரியாரிடம் ஆயுதப் பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்கப்பட்டதும் நகர ஜனங்கள் எல்லாரையும் அழைத்து ஆயுதப் பயிற்சிப் பரீட்சையும் வைத்தார்கள், அந்தப் பெரிய கூட்டத்திலே ஆயுதப் பயிற்சிப் பரீட்சை ஆரம்பித்தது. அருச்சுனன் எல்லாரிலும் மேலாகத் தன் திறமைகளைக் காட்டினான். இது துரியோதனனுக்குப் பிடிக்கவில்லை.

அந்தச் சமயத்தில் சூரியப் பிரகாசத்துடன் கூடிய ஒரு வாலிபன் சபை நடுவில் எழுந்தான். "அருச்சுனா! உன்னிலும் மேலாக நான் செய்து காட்டுகிறேன். உன் திறமைகளையிட்டு அதிகமாக எண்ணிவிடாதே" என்று கூறினான் அந்த வாலிபன். அவன்தான் கர்ணன்.

துரியோதனனுடைய உள்ளம் குளிர்ந்தது அவன் கர்ணனைத் தழுவிக்கொண்டு, "நீ என் இராச்சியத்தில் எது வேண்டுமானாலும் செய்துகொள்" என்றான்.

"அரசனே! அருச்சுனனுடன் யுத்தத்தையும், உன்னுடன் நட்பையும் கோரியே நான் வந்தேன்" என்று கர்ணன் கூறினான்.

கர்ணன் தன்னை இகழ்ந்துவிட்டான் என்று அருச்சுனன் அடங்காத கோபங் கொண்டான். "கர்ணா! அழைப்பின்றிச் சபைக்கு வருவோரும், கேட்பாரின்றிப் பேசுவோரும் இகழப் படுவார்கள்" என்று கூறினான்.

"அருச்சுனு! இந்தச் சபை ஆயுதப் பயிற்சிப் பரீட்சைக்கென்றே ஏற்பட்டது. வீண் பேச்சில் பயனென்ன? பாணங்களால் பேசலாமே!" என்று கர்ணன் கூறினுன்.

இதைக் கண்டு சபையில் ஆரவாரம் ஏற்பட்டது. ஜனங்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து கொண்டார்கள். குந்தி கர்ணனைத் தெரிந்துகொண்டாள். அவள் மூர்ச்சித்து விழுந்தாள்.

பிறகு கிருபாச்சாரியார் கர்ணனைப் பார்த்து, "பாண்டு புத்திரனுன அருச்சுனன் உன்னுடன் யுத்தத்துக்குத் தயாராக இருக்கிருன். நீ உன்னுடைய பிறப்பு வளர்ப்பையும், எந்த ராஜகுலம் என்பதையும் சொல்லு" என்ருர்.

அதைக் கேட்டு கர்ணன் தலைகுனிந்தான். துரியோதனன் ஆத்திரத்துடன் எழுந்து, "நான் கர்ணனை அங்க தேசத்துக்கு அதிபதியாக நியமிக்கிறேன்" என்று கூறி, உடனேயே மகுடாபிஷேகஞ் செய்வித்தான். கர்ணனும் சந்தோஷத்துடன் எழுந்தான். கர்ணனை எடுத்து வளர்த்த தேர்ப்பாகன் கர்ணனை நோக்கி வந்து அவனைத் தழுவிக் கொண்டான்.

அப்பொழுது பீமன் நகைத்துக் கொண்டே, "கர்ணு! உன் குலத்துக் கேற்பக் குதிரைச் சவுக்கை எடுத்துக்கொள். அதுதான் உனக்குத் தகுதி" என்ருன்.

சபையில் பெரிய குழப்பம் உண்டாயிற்று. இதற்கிடையில் சூரியன் அஸ்தமித்துவிட்டான். சபை கலைந்தது.

வெகு காலத்துக்குப் பிறகு, பாரத யுத்தத்தில் கர்ணனுல் அருச்சுனனுக்கு ஆபத்து நேரிடும் என்று இந்திரன் கர்ணனிடம் சென்று அவனது கவச குண்டலங்களை யாசித்துப் பெற்ருன். இந்திரன் அவ்விதம் செய்வான் என்று சூரியன் கர்ணனது கனவிலே தோன்றிச் சொல்லி

யிருந்தான். ஆனாலும் ஒருவர் கேட்டதை இல்லை என்று சொல்லாத கர்ணன் கவசகுண்டலங்களை இந்திரனுக்குக் கொடுத்தான்.

கர்ணன் பரசுராமரிடம் சென்று தான் பிராமண வம்சத்தினன் என்று கூறிச் சீடனாக அமர்ந்து பிரமாஸ்திர மந்திரத்தைக் கற்றான். ஒருநாள் பரசுராமர் கர்ணனது மடியில் தலைவைத்துப் படுத்துறங்கினார். அப்பொழுது ஒரு புழு கர்ணனது துடையில் கடித்துக் குடைந்தது. ரத்தம் பெருகிற்று. குருவின் நித்திரைக்கு இடையூறு ஏற்படுமே என்று கர்ணன் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தான்.

பரசுராமர் விழித்தெழுந்து இதைக்கண்டார். "நீ க்ஷத்திரியனாக இருக்கவேண்டும். க்ஷத்திரியனால்தான் இவ்விதம் உடல் வேதனையைத் தாங்கமுடியும். பொய் சொல்லி என்னை ஏமாற்றினாய். ஆதலால் நீ கற்ற பிரமாஸ்திர மந்திரத்தை ஆபத்தான சமயங்களில் மறந்து போவாய்" என்று சபித்தார்.

அந்தச் சாபத்தினால் கர்ணன், அருச்சுனனோடு கடும் போர் செய்தபோது அந்த மந்திரத்தை மறந்து போனான். அவன் கடைசிவரை தன் ஆப்தனான துரியோதனனுக்காகவே போராடினான். அற்புதமான போர் செய்து சுத்தவீரன் என்ற புகழ் பெற்றான்.

கர்ணனது தேர் சேற்றில் புதைந்துகொண்ட போது அருச்சுனன் கர்ணனைக் கொன்றான். குந்திதேவி "மகனே" என்று அலறினாள்.

[வியாஸர் விருந்து]

பேழை குடைந்தது ஆப்தனான

வினுக்கள் :

1. கர்ணன் அங்க தேசத்துக்கு அதிபதியான வரலாறு என்ன ?

2. கர்ணன், அருச்சுனன் கடும்போர் செய்தபோது பிரமாஸ்திரத்தை மறந்த காரணம் யாது ?

3. கர்ணனது சிறப்புக்கள் எவை ?

6. ஊற்றுகள்

மலைகளிலும் மேட்டு நிலங்களிலும் பெய்யும் மழை நீர் கீழே ஊறிப் பல இடங்களிலிருந்து வெளி வருகிறது. அப்படி வெளிவருவனவற்றை ஊற்றுகள் என அழைக்கிறோம். இவ்வூற்றுகள் மலைச்சாரல்களிலே உண்டாகிப் பாயும்போது மிக்க அழகுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. பூமியில் பள்ளமான இடங்களிலும் இவ் விதமான நீர் சுரக்கிறது. அதனுல் நாம் தண்ணீருக்காகப் பள்ளங்கள் தோண்டுகிறோம். அவைதாம் கிணறுகள். இவ்விதம் தோண்டப்படும் கிணறுகளில் விநோதமான ஊற்றுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் பிற்ஸ்பேர்க் என்ற நகரத்துக்கு அருகில் விசித்திரமான ஒரு கிணறு இருக்கிறது. அது ஏழாயிரத்து நூற்று எழுபத்து நாலு அடி ஆழமானது. அதன் அடிப்புறத்தில் மிகுந்த வெப்பமுள்ள நீர் காணப்படுகிறது. ஆனுல் மேற்புறத்தில் சாதாரணமான குளிர்ந்த தண்ணீரே காணப்படுகிறது. அதே தேசத்தில் உள்ள வேறொரு கிணற்றின் மேற்புறத்தில் நல்ல தண்ணீரும், ஆழத்தில் கந்தக நீரும் காணப்படுகின்றன.

இந்திய தேசத்தின் வடக்கே மத்திய மாகாணத்தில் கண்டுவா என்னும் ஒரு நகரமுண்டு. அங்கே ஒரு கிணற்றிலிருந்து பால் போன்ற வெள்ளை நிறமான

நீர் ஊறுகிறது. அந்நீர் சாராயத்தைப் போலக் குடிப்பவர்களுக்கு வெறியை உண்டு பண்ணுகிறது.

இவற்றைவிட, தண்ணீருக்குப் பதிலாக எண்ணெய் ஊறி வருமிடங்களும் அநேகமுண்டு. மண்ணில் ஊறும் எண்ணெய்க்குத்தான் மண்ணெண்ணெய் என்று பெயர். பூமியின் கீழ் குவிந்து கிடக்கும் உப்புச் சத்துப் பொருள்கள், சுண்ணும்புச் சத்துப் பொருள்கள், பாஷாணச் சத்துப் பொருள்கள் என்ற இவற்றின் சம்பந்தத்தால் தண்ணீர் எண்ணெயாக ஊறி வருகிறது என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிருர்கள்.

இவ்வித ஊற்றுகளைப் பற்றி மக்கள் வெகுகாலமாக ஒன்றும் தெரியாமல் இருந்தார்கள். ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலிருக்கும் கஸ்பியன் கடலையடுத்த பகுதிகளில் இவ்வித ஊற்றுகள் அநேகம் இருக்கின்றன. அங்கே எண்ணெய்க் கிணறுகளைக் கண்டு பிடித்ததற்கு முன் உஷ்ணமான காலங்களில் நிலத்தின் கீழுள்ள எண்ணெய் ஆவியாகி, அந்த ஆவியில் சில சமயங்களில் தீப்பற்றிக் கொள்ளுவது முண்டு. அப்போது ஜனங்கள் அது கடவுளின் செய்கை என்று எண்ணிஞர்கள். பிறகுதான் ஆவியான எண்ணெயில் தீப்பற்றுகிறது என அறிந்தார்கள். அதன் பிறகே அந்த எண்ணெயைத் தோண்டி எடுத்து மக்கள் உபயோகித்தார்கள்.

இவ்வித ஊற்றுகள் நாளடைவில் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், அமெரிக்கா ஆசியா முதலிய கண்டங்களிலும் நிறையக் கண்டு பிடிக்கப்பட்டன. அமெரிக்காவில் கலிபோர்னியாவையடுத்த கடற்கரைகளில், அதாவது கடலின்கீழ் பல இடங்களில் மண்ணெண்ணெய் ஊறுவதைக் கண்டு பிடித்துக் கடல் நீரைக் கட்டி எண்ணெய் எடுக்கிருர்கள். இந்த

ஊற்றுகள் ஒவ்வொன்றிலும் தினமும் பத்தாயிரம் கலன் எண்ணெய் எடுக்கிறார்கள்.

பிலிப்பைன் தீவுகளில் பாட்ரான் என்னும் ஒரு தீவுண்டு. அங்கே உள்ள ஒரு மலைச் சாரலில் தண்ணீரும் எண்ணெயும் கலந்த ஒரு ஊற்றுக் காணப் படுகிறது. அந்த எண்ணெய் முழுவதும் ஆற்று நீரோடு கலந்து விடுவதால் அதைப் பிரித்தெடுக்க முடியாது போய்விடுகிறது.

இன்னும் ஊற்றுகளில் எத்தனையோ விநோதங்கள் சொல்லப் படுகின்றன. இங்கிலாந்தில் யோர்க்ஷயர் என்ற மாகாணம் ஒன்றுண்டு. அங்கே நரெஸ்பரோ என்ற நகரத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அதன் மேலுள்ள குன்றிலிருந்து மழை போன்று நீர்த்துளிகள் அக்கிணற்றுள் விழுகின்றன. அக்கிணற்று நீரில் நனைக்கப் படும் பொருள்கள் கல்லாகி விடுகின்றனவாம். இந்த அற்புதத்தைப் பார்க்க வருபவர்கள் இலை, தழை, புல், பூண்டுகளை அதில் நனைத்துச் செல்லுகிறார்கள். அதில் துணிகளை நனைத்தாலும் அவை கல்லாக மாறி விடுகின்றனவாம்.

இப்படி ஒரு ஊற்று வட இந்தியாவிலே இமய மலைச் சாரலில் இருக்கிறதாக அங்கு யாத்திரை செய்தவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் அந்த ஊற்று இன்ன இடத்திலேதான் இருக்கிறது என்று நிச்சயமாக யாருமே சொல்லவில்லை.

ஊற்றுகளில் ஏற்படுகிற இந்த மாறுபாடுகளெல்லாம் அந்த அந்த ஊற்றுகளில் கலந்திருக்கும் பொருள்களின் சக்தியால் ஏற்படுகின்றன என்றே அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வினுக்கள் :

1. ஊற்றுகள் எவ்விதம் தோன்றுகின்றன ?
2. விசித்திரமான ஊற்றுகளைப் பற்றி என்ன அறிவீர் ?
3. எண்ணெய் ஊற்றுகள் எவ்விதம் உண்டாகின்றன ?
4. உலகிலுள்ள எண்ணெய் ஊற்றுகளைப் பற்றி என்ன அறிவீர் ?

7. நமது நாடு

இந்த ஈழநாட்டின் மண்ணிலேதான் ஒரு நாள் நாங்கள் பிறந்தோம். இன்று வாழ்கின்றோம். எமது அன்னையர்களும் தந்தைமாரும் அவர்களது முன்னோர்களும் பிறந்து வாழ்ந்ததும் இந்த இனிய நாட்டின் மண்ணிலேதான். அவர்களது பொன்னுடல்கள் எல்லாம் மறைந்ததும் இந்த மண்ணிலேயே. நாங்களும் இந்த மண்ணோடு மண்ணாக ஒரு நாளைக்குச் சேர்ந்துவிடப் போகின்றோம். ஆதலின் இந்த நாடு எங்கள் உயிரினும் இனியது. தாயினும் அருமையானது. தந்தையினும் பெருமைப் படுத்தத் தக்கது. இதை நாங்கள் வணங்குகிறோம்.

எல்லாச் செல்வங்களும் நிறைந்து பொலியும் இலங்கை என்னும் ஈழத்தாயே ! உன் பெருமைகளை நினைந்து நாங்கள் சந்தோஷப் படுகிறோம். நீ வானளாவிய அழகான மலைகள் பலவற்றை உடையாய். பளிங்கு போன்ற சுனைகளை நிறைய வைத்திருக்கின்றாய். இனிய நதிகள் பல உன் மடிமீது தவழ்ந்து விளையாடுகின்றன.

உன் மலைக்குழந்தைகள் அளவற்ற இரத்தினங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன அல்லவா ! உன் மடி மீது தவழ்ந்து விளையாடும் நதிகள் அந்த இரத்தினங்களை எடுத்து விளையாடிய பின் தரைகளில் எறிந்துவிட்டுக் கவலையின்றிப் போய்விடுகின்றனவாமே ! விலை மதிப்

பில்லாத முத்தின் குவியல்களைக் கடற்றெய்வம் கொண்டு வந்து உன் கரையாகிய பாதங்களில் வைத்துத் தினமும் வணங்குகிறதல்லவா? தாயே! நீ பெரிய செல்வி; உலகமறியாத சக்கரவர்த்தினி; உன்னை நாங்கள் எப்பொழுதும் வணங்குகிறோம்.

பசுமையான சோலைகளே உனது இனிய ஆடையாம். நதிகள் எல்லாம் உனது இரத்தின மாலைகளாம். அந்த மாலைகளில் சேர்க்கப்பட்டிருக்கும் நீல மணிகளே தடாகங்கள் என்று சொல்லுகிறார்கள்.

தாயே! உன் பெருமைகளை எங்களாற் சொல்ல முடியாது. நீ எப்பொழுதுமே இளமை மாறாத கன்னியாக இருக்கிறாய். யுகங்கள் செல்லச் செல்ல உன் அழகு புதுமை அடையும் விந்தையை எங்களால் அறிய முடியவில்லையே!

உனது அழகைப் பார்க்க வருஷந்தோறும் வேறு வேறு தேசங்களிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் வந்து கொண்டே யிருக்கிறார்கள். வந்தவர்களில் எத்தனையோ பேர் உன்னைப் பிரிய மனமின்றித் தங்கியே விட்டார்கள்.

நீ வஞ்சனையின்றி எல்லோருக்குமே இனிய உணவைக் கொடுக்கின்றாய். எல்லோரையும் வாழ வைக்கின்றாய். உன் புகழ் பெரிது. மிகமிகப் பெரிது. வானை முட்டி அப்பாலும் வெகுதூரம் சென்று கொண்டே இருப்பது.

இணையில்லாத ஈழமென்னும் எங்கள் தாயே! உன் குழந்தைகளாகிய நாங்கள் உன்னைத் தொழுகின்றோம். உன் பெருமைகளை இடைவிடாது பாடுகின்றோம். உன்னை அந்நியர் அவமதித்தால் நாங்கள் இனி ஒருநாளும் பொறுத்திரோம். இது சத்தியம்.

பொலியும் சுனைகளை

வினுக்கள் :

1. தாயினும், தந்தையினும் மேலானதாக நமது நாட்டைப் போற்றுகிறேமே, ஏன் ?

2. நமது நாட்டைப் பற்றி வேறு நாட்டவருக்குச் சொல்லும்போது எவ்விதம் சொல்லுவீர் ?

8. சிறு விதைக்குள் மரம் முழுதும்

சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் தம்முடைய குமாரன் சுவேதகேதுவுக்கு உபதேசித்தது சொல்லப்படுகிறது.

"அனைத்தும் ஒரு சக்தியிலிருந்து வந்ததாகச் சொல்லுகிறீர்களே. இந்த அற்புத உலகம் அவ்வளவும், இந்தப் பல்லாயிர உருவ வேற்றுமைகள் எல்லாம், பெயரும் வடிவமற்ற ஒருபொருளிலிருந்து எவ்வாறு உண்டாகும் ?" என்று மகன் கேட்கிறுன்.

"அப்பனே ! அந்த ஆல மரத்தின் பழம் ஒன்று எடுத்துவா" என்றுர்.

சுவேதகேது ஒரு பழத்தை எடுத்துவந்து, "இந்தாரும், ஐயா !" என்று சொன்னுன்.

"அதை உடை" என்றுர்.

"உடைத்தேன், ஐயா" என்றுன்.

"உள்ளே என்ன இருக்கிறது பார் ?" என்றுர்.

"சிறு சிறு விதைகள் இருக்கின்றன" என்றுன்.

"ஒரு விதையை எடுத்து, அதை உடைத்துப் பார்" என்றுர்.

அவன் ஒரு சிறு விதையை எடுத்து, சொன்னபடி செய்தான்.

"என்ன காண்கிறுய் ?" என்றுர்.

"ஒன்றும் காணவில்லை" என்றுன்.

"அப்பனே! அந்த ஒரு விதைக்குள் உன் கண்ணுக்குத் தோற்றமாகாமல் கிடக்கும் சூட்சும வஸ்துவே, இலைகளும், கிளைகளும், விழுதும் கொண்ட இந்தப் பெரிய ஆலமரம் ஆயிற்று. இந்த மரம் முழுவதும் அந்தச் சிறு விதையினுள் கண்ணுக்குத் தெரியாமல் அடங்கி இருந்தது. இதை யோசித்துப் பார். இவ்வாறே உலகம் முழுதும் கண்ணுக்குப் புலப்படாத சக்தியிலிருந்து உண்டாயிற்று" என்றார்.

பல்லாயிர வருஷங்களுக்கு முன் உத்தாலகர் தம் மகனுக்கு விளக்கிச் சொன்னதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் நாம் இப்போதும் உண்மை அறிவும் அடக்கமும் பெறலாம். ஆலம் விதை மிகச் சிறியது. அதற்குள் எவ்வாறு இந்தப் பெரிய மரமும் அதன் கிளைகளும், விழுதும், இலையும், பாலும், காயும், அவைகளின் நிறம், சுவை, குணம் எல்லாம் அடங்கி மூடிக் கிடந்தன? அந்த விதையை எங்கே புதைத்தாலும் இந்த நிறம், இந்தக் குணம், இந்த அளவு, இந்த உருவம் கொண்ட மரமே உண்டாகும். வேறொன்றினின்று இது உண்டாகாது. மரம் முழுதும் அந்த விதையினுள் அருவமாகக் கிடக்கிறது. இதைப் போலவே ஒவ்வொரு வகை விதையிலும் அவ்வவ்வகை மரம் முழுதும், பூவின் வாசனையும் நிறமும், மற்ற சகல விசேஷ குணங்களும் உள்பட, மறுபடி, அம்மரத்தில், இத்தகைய விதைகள் நிறைந்த கனிகள் உள்பட, அடங்கி நிற்கின்றன. இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால், உலகத்தின் இரகசியம் ஒருவாறு விளங்கும். கற்றறி மூடரும் அடக்கம் பெறலாம்.

[உபநிஷதப் பலகணி]

சூட்சுமவஸ்து அருவமாக

வினாக்கள்:

1. உத்தாலகர் தன் மகனுக்கு எவ்விதம் உபதேசித்தார்?
2. சிறிய ஓர் ஆலம்விதையில் அடங்கியிருக்கும் சக்தி யாது?
3. உத்தாலகரின் உபதேசத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன?

9. கவி அரசி சரோஜினி தேவி

இந்தியாவின் புகழை உலகம் முழுவதும் பரவச் செய்தவர்களில் சரோஜினி தேவியும் ஒருவர். அவரது

கவிதைகள் உலகம் முழுவதும் போற்றப் படுகின்றன. அவரது பிரசங்கங்கள் எல்லாருடைய மனத்திலும் தேசிய உணர்ச்சி யூட்டும் சக்தி வாய்ந்தவை. அந்நிய பாஷையாகிய ஆங்கிலங் கற்று, பரம்பரை ஆங்கிலேயனே அதிசயிக்கும்படி கவிபாடும் சரோஜினி தேவியாரால் இந்தியா பெருமை அடைகிறது. அவரது சுதந்திர வேகங் கொண்ட வீரப் பிரசங்கங்கள் இந்தியத் தாயை அலங்கரிக்கின்றன.

ஹைதராபாத்தில் 1879-ம் ஆண்டு சரோஜினி தேவி பிறந்தார். அவரது தந்தையாரான அகோரநாத சட்டோபாத்தியாயர் புராண இதிகாசங்களைக் கற்றிருந்தார். எடின்பேர்க் சர்வகலாசாலையில் விஞ்ஞான சாஸ்திர 'டொக்டர்' பட்டம் பெற்றவர். தன் மகளான சரோஜினி தேவியும் விஞ்ஞானத்தில் அறிவு பெறவேண்டும் என்று அவர் ஆசை கொண்டார்.

சரோஜினி தேவி சிறுவயதிலேயே கவிபாடும் சக்தியைப் பெற்று விட்டார். பதினறு வயதாக இருக்கும்போது மேற்படிப்புக்காக லண்டன் சென்றார். அங்கேயும் கவிதை புனைந்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்றார். மூன்று வருஷத்தின் பின் தேக அசௌக்கியம் காரணமாகப் படிப்பை முடித்துக் கொள்ளாமலே தாய்நாடு திரும்பினர்.

ஹைதராபாத் வந்து சேர்ந்த சில நாட்களில் சரோஜினி தேவிக்கும், டொக்டர் கோவிந்தராஜ நாயுடு என்பவருக்கும் விவாகமாயிற்று. அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தார்கள்.

சரோஜினி தேவி பம்பாயில் இருக்கும்போது தேச பக்தர்களான கோகலே, திலகர் என்பவர்களுடன் நட்புக்கொண்டார். இவர்களது நட்பு, நாட்டின் நிலை

மையை அவருக்கு அறிவுறுத்திச் சுதந்திர தாகத்தையும், சேவா உணர்ச்சியையும் ஊட்டியது.

இந்த நாட்களில் அவரது கவிதைகளைப் புலவர்கள் புகழ்ந்து பாராட்டினார்கள். 'கவி அரசி' என்று பட்டம் சூட்டினார்கள். இந்திய அரசாங்கத்தினர் 'கெய்சரி ஹிந்த்' என்ற பதக்கத்தை அளித்துக் கௌரவித்தனர்.

1920-ம் ஆண்டில் தேசநலங்கருதி லண்டனுக்குச் சென்றார். அங்கு நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பாஞ்சாலப் படுகொலைச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டி, ஆங்கிலேய ஆட்சியின் அலங்கோலத்தை விளக்கினார். ஆங்கிலேய அதிகாரிகள் இதை எதிர்த்தார்கள். சரோஜினி தேவியார் கேட்ட சில கேள்விகளுக்குப் பதில் கூற முடியாது போகவே அவர்கள் அடங்கி விட்டார்கள். தாய்நாடு திரும்பியதும் அவர் அரசினர் அளித்த பரிசான "கெய்சரி ஹிந்த்" பதக்கத்தை அவர்களுக்கே அனுப்பிவிட்டார்.

1928-ம் ஆண்டில் மகாத்மா காந்திக்குப் பதிலாக, சரோஜினி தேவி அமெரிக்கா சென்றார். அங்கே பாதிரிமாரும், ஆங்கிலேயரும் இந்தியாவையிட்டுத் துர்ப்பிரசாரம் செய்திருப்பதைக் கண்டார். அதை நீக்கப் பல பிரசங்கங்கள் செய்தார். ஆங்கிலேயரின் அநீதிகளையும், மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக தத்துவத்தையும் விளக்கினார். அமெரிக்க மக்கள் இந்தியாவையிட்டு நல்லபிப்பிராயம் கொள்ளும்படி செய்தார்.

சரோஜினி தேவியார் ஆப்பிரிக்கா சென்று வெள்ளையரின் நிறத்திமிரை அடக்கப் பல பொதுக் கூட்டங்களிலே பேசினார். பத்திரிகைகளில் எழுதினார். தென்னிந்தியா, இலங்கை முதலிய இடங்களுக்கு வந்து பிரசங்கங்கள் செய்தார்.

சரோஜினி தேவியாரின் அரிய சேவையைக் கண்டு இந்திய மக்கள் அவருக்குக் காங்கிரஸ் தலைமைப் பதவியைக் கொடுத்தார்கள். உப்புச் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு என்பவற்றில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றார். சுதந்திர இந்தியாவில் ஐக்கிய மாகாணத்தின் முதலாவது கவர்னர் கவியரசி அவர்களே.

அறிவு, ஆற்றல், கவிதா சக்தி, நாவன்மை என்பவற்றினால் தன் தாய் நாட்டுக்கு உலகம் முழுவதும் புகழை ஈட்டிக் கொடுத்த கவி அரசி சரோஜினி தேவி நீடூழி காலம் வாழவேண்டும்.

துர்ப்பிரசாரம்

வினாக்கள் :

1. *சரோஜினி தேவியின் புலமையைப் பற்றி என்ன அறிவீர்?*
2. *சரோஜினி தேவியின் பிறநாட்டுப் பிரயாணங்கள் இந்தியாவுக்கு எவ்விதம் நன்மை செய்தன ?*

10. திமிங்கிலங்கள்

நிலத்திலும் தரையிலும் வசிக்கும் எல்லாப் பிராணிகளிலும் திமிங்கிலங்களே மிகவும் பெரியவை. இவை பெரிய சமுத்திரங்களிலும் ஆழமான கடல்களிலுமே வசிக்கின்றன. திமிங்கிலங்கள் பத்து அடி முதல் நூறு அடிக்கு மேற்பட்ட நீளமும், அவ்வவற்றிற்கேற்ற பயங்கரத் தோற்றமும் உடையன.

இவை மீனினத்தைப் போலல்லாமல் சூடுள்ள இரத்தத்தை உடையன. மிருகங்களைப் போலக் குட்டிகளை ஈனுகின்றன. இதனால் திமிங்கிலத்தை மீனினத்தோடு சேர்த்துச் சொல்லுவதில்லை. இவைகளில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உண்டு. தாவரங்களையே உண்டு வாழும் திமிங்கிலங்களும் உண்டு. தாவர

பட்சிணிகளுக்கு ஆகாரங்களை மென்று உண்பதற்காகப் பற்கள் இருக்கின்றன. அவை தோற்றத்திலும் சிறியவைகளே.

மாமிச பட்சிணிகளான திமிங்கிலங்களோ தமது ஆகாரத்தை அப்படியே விழுங்கி விடுகின்றன. உருவத்திலும் மிகமிகப் பெரியவை இந்த மாமிச பட்சிணிகளே. இவை தமக்குரிய ஆகாரங்களைத் தேடிக் கொள்வதற்காக ஆழக் கடல்களின் நடுவிலும், பெரிய சமுத்திரங்களிலுமே வசிக்கின்றன.

திமிங்கிலங்கள் மிகவும் உபயோகமானவை. அவற்றிலிருந்து கிடைக்கும் நெய்யைச் சாப்பாட்டுக்கு எடுக்கிறார்கள். கொழுப்பிலிருந்து மெழுகுவர்த்தி செய்கிறார்கள். தோலைக் கூடாரங்களுக்கு எடுக்கிறார்கள். நரம்புகளிலிருந்து பெலமுன கயிறு திரிக்கிறார்கள். எலும்பிலிருந்து பலவித தந்த வேலைகள் செய்கிறார்கள். ஒரு பெரிய திமிங்கிலத்திலிருந்து சுமார் ஐம்பது தொன் நெய்யும் கொழுப்பும், இரண்டு தொன்னுக்கதிகமான எலும்புகளும் எடுக்கப்படுகின்றன. அவ்விதமான ஒரு திமிங்கிலம் சாதாரண காலங்களில் ஆயிரம் பவுனுக்கு அதிகமான விலை பெறுகிறது.

திமிங்கிலங்களில் எண்ணெய், கொழுப்பு முதலியவைகளைவிட, அவற்றின் தலையிலிருந்து ஒருவகை உயர்ந்த மெழுகு ஏராளமாக எடுக்கப் படுகிறது. சிலவற்றின் குடலில் அம்பர்கிறீஸ் என்னும் மிக்க வாசனை உள்ள மெழுகும் அகப்படுகிறது. இவ்வித மெழுகு தென் சமுத்திரத்தை அடுத்த தென்னமரிக்கக் கரைகளிலும் நியூசீலந்துக் கரைகளிலும் பெரிய கட்டிகளாக வந்தடைகின்றன. இம்மெழுகு ஆவியாகத் தக்கதும் தீப்பற்றக் கூடியதுமாம். சாதாரண காலத்தில் இப்படிக்

கிடைக்கும் ஒரு பெரிய கட்டி இருநூறு பவுனுக் கதிகமாக விலையாகிறது.

இதனுல் மனிதர்கள் திமிங்கிலங்களை வேட்டை யாடுகிருர்கள். இவை மூச்சு விடுவதற்காக அடிக்கடி ஜலத்தின் மேற்புறத்துக்கு வருகின்றன. அப்போது ஈட்டிகளாற் குத்தியும்,அம்புசொருகிய துப்பாக்கி பீரங்கி களாற் சுட்டும் வேட்டையாடுகிருர்கள். மிகப் பெரிய திமிங்கிலங்களை வேட்டையாடுவோர் பெரிய கப்பல் களில் சென்று அவற்றைத் தக்கபடி காயப்படுத்தியபின் தங்கள் கப்பல்களை ஒதுக்கமான கரைகளுக்கோ பாறை களை யடுத்த இடங்களுக்கோ கொண்டுபோய் விடு வார்கள். காயப்பட்ட அத்திமிங்கிலம் வலி யேறிய சில மணி நேரத்திலோ, சில நாட்களிலோ வேதனை யால் நீரின்மேல் எழுந்து சமுத்திரத்தைக் கலக்கும். அந்த நேரத்தில் சமுத்திரத்தின் கொந்தளிப்பு மிக மிகப் பயங்கரமாக இருக்கும். அந்த இடத்தில் அகப் படும் எந்தப் பெரிய கப்பலும் நீரில் மூழ்கிப்போகும்.

தென் சமுத்திரப் பகுதிகளில் தலை பெருத்த ஒரு ஜாதித் திமிங்கிலங்கள் வாழுகின்றன. இவ்வினத் திமிங் கிலங்கள் சுமார் நூறடிக்கு மேற்பட்ட நீளமுடையன. இவற்றின் குட்டிகள் பிறக்கும்போதே பத்துப் பன்னி ரண்டு அடி நீளமுடையவைகளாக இருக்குமாம். இந்த ஜாதித் திமிங்கிலங்களின் வாய் பெரிய பிலம் போல இருபது இருபத்தைந்து அடி நீளமும் சுமார் பதினைந்து அடிக்கு மேற்பட்ட அகலமும் உடையது. இவை கூட்டமாகவே சேர்ந்து வாழுகின்றன. அக் கூட்டத்தில் மிகவும் பெரியதாக இருக்கும் திமிங்கிலமே தலைமை வகித்து அவற்றை வழி நடத்தும். உற்சாகம் வந்ததும் அவை சமுத்திரத்தில் துள்ளிக்குதித்து விளை யாடுகின்றன. அந்த ராட்சதத் திமிங்கிலங்கள் கடல்

மட்டத்துக்கு மேல் எழுபது எண்பது அடிக்குப் பாய்ந்து குதிக்குமாம். சமுத்திரத்தில் ஐந்து ஆறு மைல்களுக்கப்பால் நின்று பார்த்தாலும் அது நன்றாகவே தெரியும். அப்போது சமுத்திரம் கொந்தளித்து மிகவும் பயங்கரமாகக் காணப்படுமாம். ஆனால் கப்பல்கள் அதிகம் சஞ்சாரஞ் செய்யாத ஒதுக்கமான சமுத்திரப் பகுதிகளிலேதான் அவை வாழுகின்றன.

குறம்பஸ் என்ற ஒருவகைத் திமிங்கிலம் தன்னினத்தையே கொன்று தின்னுகிறது. இதன் பற்கள் வாள் போன்றவை. இவற்றைக் கண்டால் மிகப் பெரிய திமிங்கிலங்களும், சுறாக்களும் அஞ்சி ஓடுகின்றன. இவை நான்கு ஐந்தாகச் சேர்ந்து கொண்டு பெரிய திமிங்கிலங்களைத் தாக்கிக் கொன்று சாப்பிட்டு விடுகின்றன. எவ்வளவு சாப்பிட்டாலும் இவற்றின் பசி ஆறுவதேயில்லையாம்!

இன்னும் ஒரு ஜாதித் திமிங்கிலங்களுக்கு மூக்கு ஈட்டி போல இருக்கிறது. இவைகளும் மிகவும் மூர்க்கமானவை. இவை இருபது முப்பதாகச் சேர்ந்து கொண்டே வாழுகின்றன. இவற்றின் மூக்கு முள் கப்பலின் மேற்புறத்தில் பதித்திருக்கும் கனதியான உலோகத் தகடுகளையும் குத்திக் கிழித்துவிடத்தக்க வலிமை உள்ளது. தங்கள் எதிர்ப்புக்கு மிஞ்சிய கப்பல்களில் வேட்டைக்காரரைக் கண்டதும் இவை சமுத்திரத்தில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு அடிக்குக் கீழ் ஓடிப் பதுங்கி விடுகின்றன. சமுத்திரத்தில் இவ்வளவு ஆழத்துக்கு வேறெந்த ஜாதித் திமிங்கிலங்களும் போவதில்லை. இதன் கொம்பு முள் யானைத் தந்தத்திலும் மிகவும் மதிப்பும் விலையுமுள்ளது.

இவ்விதமான பெரிய திமிங்கிலங்களையும் ஒரே மூச்சில் விழுங்கிவிடக் கூடிய பிரமாண்டமான திமிங்

கிலங்களும் ஒரு காலத்தில் இருந்தன. அவற்றைத் திமிங்கிலகிலம் என்று அழைத்தார்களாம். அவை இப்பொழுது எந்தச் சமுத்திரத்திலும் இல்லை.

வினுக்கள் :

1. திமிங்கிலங்களை வேட்டையாடுவதேன்?

2. நீர் திமிங்கில வேட்டைக்குப் போனதாகக் கற்பனை செய்து, உமது வேட்டை அநுபவத்தைப் பற்றிக் கூறுக.

3. திமிங்கிலகிலம் என்றால் என்ன? இப்பொழுது இல்லாத அது முன்னொரு காலத்தில் இருந்தது என்று எவ்விதம் சொல்ல முடியும்?

11. வெந்நீர் ஊற்றுகள்

வெந்நீரைச் சுரக்கின்ற ஊற்றுகள் உலகின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. அவை எப்போதும் எரிமலைப் பாங்கான பிரதேசங்களிலேயே காணப்படும். பூகம்பம், எரிமலை என்பவற்றிற்குரிய காரணங்களே வெந்நீர் ஊற்றுகளுக்கும் உரிய காரணங்களாகும்.

நமது இலங்கையிலே திரிகோணமலையில் இவ்வித ஊற்றுகள் காணப்படுகின்றன. அதிலும், அதிசயிக்கத் தக்க விதமாக ஏழு ஊற்றுகள் காணப்படுகின்றன. ஒன்றிலிருந்தொன்று படிப்படியாக உஷ்ணங் கூடிக் கடைசியில் கொதிக்கும் நீர் வரையில் அந்த ஊற்றுகளிலிருந்து நீர் வெளிவருகிறது. இதைப் பார்ப்பதற்காக அங்கே பிரயாணிகள் செல்கின்றனர்.

இதை விட, திடீர் திடீரென்று வெகுதூரம் வரைக்கும் நீரை வீசிஇறைக்கும் வெந்நீரூற்றுகளும் உலகிலே பல காணப்படுகின்றன. ஐரோப்பாக் கண்டத்தின் வடக்கே ஐஸ்லாந்து என்றொரு தீவிருக்கிறது. அங்கே உள்ள எரிமலைப் பாங்கான பிரதேசம் ஒன்றில் அநேக வெந்நீரூற்றுகள் காணப்படுகின்றன. அவற்றுள்

ஒன்று மிகவும் பெரியது. அந்த ஊற்றின் வாய் பதினைந்து அடி அகலமும் ஐம்பத்தாறு அடி நீளமும் உடையது. அந்தப் பிலவாயில் சாதாரண நேரத்தில் குளம்போல நீர் தேங்கி நிற்கும். திடீரென்று பூமியின் கீழ் இடி முழக்கம் போன்ற சத்தங்கள் கேட்கத் தொடங்கியதும், அது கொதித்துப் பொங்கத் தொடங்குகிறது. பூமியினுள் அதிரும் ஒலி அதிகரிக்க அதிகரிக்க நீரானது மேல் நோக்கி எழுகிறது. உள்ளே கேட்கும் சத்தமானது பயங்கரமாகக் கேட்கத் தொடங்கியதும் அந்த ஊற்று ஜலம் ஆவியும் நீருமாக மேல் நோக்கி சுமார் இருநூறு அடிக்கு மேல் பாய்ந்து விழுகிறது. அப்பொழுது அந்த நீராவிமீது சூரிய ஒளிபட அநேக அழகான வானவிற்களின் தோற்றங்கள் காணப்படுகின்றன. இந்தப் பயங்கரமான வெந்நீரூற்றானது சில நாட்கள் வரை இப்படியேயிருந்து அடங்கி விடுகிறது.

வட அமெரிக்காவில் வோமிங் என்னும் எரிமலைப் பாங்கான பிரதேசம் இருக்கிறது. அப்பகுதியில் சுமார் ஆயிரத்தைந்நூற்றுக்கு அதிகமான வெந்நீரூற்றுகள் காணப்படுகின்றன. அந்த ஊற்றுகளும் நமது திரிகோணமலைப் பகுதியிலே காணப்படும் ஊற்றுகள் போலப் பல நிலையிலும் இருக்கின்றன. அவற்றிலும் ஒன்று மிகவும் பெரியது. அது இருபது அடி அகலமும் இருபத்தைந்து அடி நீளமும் உடையது. நிலத்தினுள் அதிர்ச்சி உண்டானதும் அந்த ஊற்றின் வாய் நிரம்புகின்றது. மேலும் பூமியினுள் இடி முழக்கம் போன்ற ஒலிகள் அதிகரித்ததும் நீர் கொதித்து வேகங் கொள்ள நீராவி சுமார் ஐந்நூறு அடி வரை மேலெழும்புகிறது. நீர் சீறிக் கிழித்துக் கொண்டு தொண்ணூறு அடி உயரத்துக்குப் பெரிய தம்பமாய் எழுந்து விடுகிறது. மேலும் நிலத்தினுள்ளே கேட்கும்

ஒலிகள் பயங்கரமாகிக்கொண்டே செல்லச் செல்ல இந்த ஊற்றும் படிப்படியாக வளர்ந்து சிறிது நேரத்துள் இருநூற்றைம்பது அடிக்குமேல் ஆகாயத்தில் பாய்ந்து செல்லுகிறது. அங்கிருந்தும் அது ஐந்து கிளைகளாகப் பிரிந்து பூமியை நோக்கி நிலம் நடுங்கும்படி விழுகிறது. மேலே பிரியும்போது நீர் சிதறி, திவலைகளாக மாறுவதால் சூரிய வெளிச்சத்தில் வானவில்லின் அற்புதத் தோற்றங்கள் உண்டாகி விடுகின்றன. அங்கே நீரூற்றின் காட்சி பயங்கரத்தை உண்டுபண்ணிய போதும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இந்த அதிசயமான ஊற்று அரை மணி நேரத்துக்குள் குறைந்து குறைந்து வந்து ஊற்று வாயினுள்ளே புகுந்து மறைந்து விடுகிறது.

அவுஸ்திரேலியாவின் தென்கீழ் திசையில் நியூசிலாந்து என்னும் தீவுகள் இருக்கின்றன. அத்தீவுகளில் வடதீவில் ஒரு பெரிய பீடபூமி உண்டு. அது சுமார் ஆயிரம் முதல் ஆயிரத்தைந்நூறு அடி வரை உயரமானது. அந்தப் பீடபூமி முழுவதுமே எரிமலையால் சிதைவடைந்து கிடக்கிறது. இப்பொழுதும் அங்கே நெருப்பைக் கக்கும் பிளவுபட்ட பெரிய வாய்களும், அநேக வெந்நீரூற்றுகளும், வெந்நீர் எரிகளும் குளங்களும் காணப்படுகின்றன. அவற்றின் அற்புதமான காட்சிகளை உலகில் வேறெங்குமே காண முடியாதாம்.

அவற்றுள் ஒன்று 'பொகுற்ரூ' என்ற வெந்நீரூற்றாகும். அது மிகவும் பெரியது. சில சமயங்களில் பெரும் சத்தத்துடன் நூறடிக்கு மேல் பொங்கி எழும்பும். அப்படி அது பொங்கிக் கொண்டிருக்கும்போது சவர்க்காரத் துண்டுகளை அதற்குள்ளே போட்டால் அதிசயிக்கும்படியாக நுரைகளை உண்டாக்கு

வதோடு மகா உக்கிரங்கொண்டு கொதித்துப் பொங்க வும் தொடங்கி விடுகிறதாம். இதனுல் அதைப் பார்க்கச் செல்வோர் சவர்க்காரங்களையும் வாங்கிக் கொண்டே செல்வது வழக்கம்.

விஞக்கள் :

1. வெந்நீரூற்றுகள் எவ்விதம் உண்டாகின்றன ?
2. ஐஸ்லாந்திலுள்ள வெந்நீரூற்றைப் பற்றிச் சொல்லுக.
3. நியூசிலாந்தின் வட தீவிலுள்ள பீடபூமியையும், வெந் நீரூற்றுகளையும் விவரிக்க.

12. சோக்கிறற்றீஸ்

மனித நாகரிகத்திற்கு அடிகோலிய கிறீஸ் என்ற தேசம் ஐரோப்பாவில் இருக்கிறது. பேரறிஞர்கள் பலர் கிறீஸிலே தோன்றினுர்கள். அவர்களுள்ளே சோக் கிறற்றீஸ் ஒருவர். அறிவுக் களஞ்சியமான சோக்கிறற் றீஸ் இளமையிலேயே கல்வியிலும், உண்மையிலும் பேரவாக் கொண்டார். கிறீஸ் தேசத்தின் தலைசிறந்த நகரங்களில் ஒன்ருன ஏதன்ஸ் நகரத்திலேயே அவர் பிறந்து வளர்ந்தார்.

அந்தக் காலத்தில் ஏதன்ஸ் நகரவாசிகள் மதா சாரியார்களின் உபதேசங்களை நம்பவில்லை. அவர்களது பொன்மொழிகளை நிந்தித்தார்கள். மனிதனுக்கு அறிவு மட்டும் இருந்தால் போதும், ஒழுக்கம் தேவையான ஒன்றல்ல என்ற குருட்டு நம்பிக்கை கொண்டிருந் தார்கள். அதனுல் மனம் போனபடி எல்லாம் செய்ய மக்கள் பின்வாங்கவில்லை.

சோக்கிறற்றீஸ் மக்களின் பிழைகளை உணர்ந்தார். அவர்கள் செய்யும் பிழைகளையும், அவர்கள் செய்ய வேண்டியவற்றையும் எடுத்துக் காட்ட விரும்பினுர்.

ஜனங்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலே அவர்களுடன் தர்க்க ரீதியிலே சம்பாஷித்தார். உண்மையான வழிக்கும், பிழையான வழிக்கும் இடையிலே உள்ள வித்தியாசத்தை அவர்கள் உணரும்படி செய்தார். முக்கியமாக அவரது போதனைகளில் மனத்தைப் பறிக்கொடுத்து அவரைப் பின்பற்றியவர்கள், வாலிபர்களே.

சோக்கிறற்றீஸ் எதிலும் மனம் சலியாதவர். விடாமுயற்சிக்காரர். சாந்த சொரூபி. அவருடைய அறிவு சூரிய மண்டலத்தைப்போல விஸ்தாரமும் ஒளியும் உடையது. ஆனால் அவர் அழகில்லாதவர். குரூபி. அறிவின் பிரகாசம் இருக்குமிடத்தில் அழகு வந்தணுகாது.

சோக்கிறற்றீஸின் மனைவி மகா கொடியவள். குரூர உள்ளம் படைத்தவள். இரக்கம் என்பதே இல்லாத அரக்கி. ஒருநாள் அவள் சோக்கிறற்றீஸை வாயில் வந்தபடி எல்லாம் திட்டினாள். வசைச் சொற்களை வேண்டியமட்டும் சொரிந்து தள்ளினாள். சாந்த சொரூபியான சோக்கிறற்றீஸ் ஞானியார் அவளுக்கு அருகில் இருப்பதை விரும்பாமல் வேறோர் இடத்தில் சென்று உட்கார்ந்தார். அவரது மனைவி பிறகும் விடவில்லை. ஒரு குடத்தில் அழுக்கு நீரைக் கொண்டு சென்று அவருக்கு அபிஷேகஞ் செய்துவிட்டாள்.

ஞானியார் சிரித்துக்கொண்டே, "இவ்வளவு நேரமும் இடித்த இடி முழக்கத்துக்கும் புயலுக்கும் இவ்வளவு மழைதானா பெய்திருக்கிறது?" என்று கேட்டார்.

அவரைப் பொறுமையின் இருப்பிடம் என்று சொன்னால் போதாது. பொறுமையைச் சிருஷ்டித்த புண்ணிய ரூபம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சோக்கிறற்றீஸ் தம் சிந்தனையில் தோன்றிய புதிய உண்மைகளை ஆராய்ந்து தம் சீடர்களுக்கு உபதேசித்தார். சீடர்களான இளைஞர்கள் அவரது உபதேசங்களைத் தேவ வாக்காக ஏற்றுக்கொண்டார்கள். நாட்டிலுள்ள இளைஞர்கள் எல்லோரும் அவரைத் தேடி வந்தார்கள். அவரது முறைகளைப் பின்பற்றி ஒழுகினார்கள்.

அவர் ஒரு எழுத்துக்கூட எழுதவில்லை. ஆனால் அவரது மேலான கருத்துக்களை அவர்களது சீடர்களான பிளாட்டோ போன்ற பேரறிஞர்கள் பல நூல்கள் மூலம் வெளியிட்டார்கள்.

ஏதன்ஸ் நகரவாசிகள் இவரது புலமையை மெச்சினார்கள். ஆனால் அதற்காக அதிகாரத்திலிருந்தவர்கள் அவருக்கு விஷம் கொடுத்துக் கொன்றார்கள். “நாட்டு இளைஞர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்தார்; பழைய தெய்வ வழிபாட்டை நீக்கிப் புதிய முறையில் தெய்வ வழிபாடு செய்யும்படி ஏவினார்; இப்படிப் பலவாறு நாட்டைக் கெடுத்துவிட்டார்” என்று அந்நகரவாசிகள் அவர் மீது வழக்குத் தொடர்ந்தார்கள். ஒழுக்கத்தில் நம்பிக்கை இல்லாத அந்நாட்டு நீதிபதிகள் அவரைக் குற்றவாளியாகக் கண்டு, அவர் விஷம் குடித்து இறக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள். உண்மையைப் பரப்பி நன்மை செய்த ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கும் நீதி எவ்வளவு அழகாயிருக்கிறது!

அந்த தீர்ப்பைக் கேட்டுச் சோக்கிறற்றீஸ் சிரித்தார். அப்போது மனமுடைந்து அழுத ஒரு சீடனைப் பார்த்து, “அன்பனே! வயோதியனாகிய என்னை மரணம் சூழ்ந்திருக்கிறது. குற்றஞ் சாட்டியவரைப் பாபம் சூழ்ந்துகொள்ளும். நீ ஏன் அழுகிறாய்?

நியாயமற்ற முறையில் தீர்ப்பளித்தவரல்லவா அதை எண்ணி எண்ணி அழவேண்டும்'' என்று தேற்றினார்.

நஞ்சு கலந்த பாத்திரத்தைக் கையில் எடுத்து அமிர்த முண்ணுவதுபோல அதை அருந்தினார். மரணம் முன்னால் நிற்கிறதே என்று மனம் கலங்கவில்லை. சிரித்துக்கொண்டே தன் சீடர்களுடன் சம்பாஷித்தார். அவரது பிரிவை எண்ணிச் சீடர்கள் அழுதார்கள்.

சோக்கிறற்றீஸ் அவர்களைப் பார்த்து, "இங்கிருந்து அழுவார்கள் என்றுதானே பெண்களை அப்புறப் படுத்தச் சொன்னேன்? அவர்களை அப்புறப் படுத்திய நீங்களே அழுகிறீர்கள். நீங்களும் பெண்களா?'' என்று சிரித்தார்.

"இந்த உடல் இதோ அழிந்துகொண்டிருக்கிறது. ஆனால் மனம் கண்ட உண்மைகள் வளர்ந்துகொண்டே இருக்கும்'' என்று கூறிக்கொண்டே சோக்கிறற்றீஸ் தம் உயிரை உண்மைப் பொருளாக மாற்றிவிட்டார். அவர் இறந்தார் என்று சொல்லவே கூடாது.

உலக நன்மைக்காக உழைத்தவர் சோக்கிறற்றீஸ். நிறைந்த அறிவின் ஆழத்திலே அவரது புத்தி தெளிந்து நின்றது. அந்தத் தெளிவின் உள்ளே கண்ட எண்ணிறந்த உண்மைகளை அவர் வெளியிட்டார். அதனால் அவர் உண்மையின் பிறப்பிடமுமானார். அதே உண்மைக்காக, அதன் மடியிலே தன் தலையை வைத்து மரணத்தை வரவேற்றார். பேயிருளின் நடுவிலே தோன்றிய தெய்வீக ஜோதிதான் சோக்கிறற்றீஸ். சோக்கிறற்றீஸ் போன்றவர்கள் ஏற்றி வைத்த உண்மை விளக்குகள் இல்லாவிட்டால் உலகம் இன்று கண் தெரியாது தடுமாறி, உணர்விழந்து கிடக்கும்.

மதாசாரியார் விஸ்தாரமும் குரூபி

வினாக்கள் :

1. சோக்கிறற்றீஸைப் பின்பற்றியவர்கள் வாலிபர்களாகவே இருந்த காரணம் என்ன ?

2. அவரைப் பொறுமையைச் சிருஷ்டித்த புண்ணிய ரூபம் என்று ஏன் சொல்லவேண்டும் ?

3. அவருக்கு மரண தண்டனை விதித்தவர்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர் ?

4. சோக்கிறற்றீஸ் போன்றவர்களால் உலகம் பெற்ற நன்மைகள் என்ன ?

13. பூர்வீக மனிதன்

ஆதிகாலத்திலே பூமியினிடத்துத் தோன்றிய பிராணிகள் காலகதியில் படிப்படியாக உயர்வையும், நுட்பமான உடலமைப்பையும் அடைந்தன. இந்த வளர்ச்சியையும் மாறுதல்களையும் நாம் பலவகைகளிலே காணலாம்.

முதல் முதலில் எலும்பில்லாத பிராணிகளே இருந்தன. அவைகளால் அதிக நாட்களுக்கு ஜீவித்திருக்க முடியவில்லை. மெல்ல மெல்ல அவை எலும்புள்ள பிராணிகள் ஆயின. முதலில் பிராணிகளுக்குண்டான எலும்பு முதுகெலும்புதான். நாம் பார்க்கும் மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் என்ற அநேகமான பிராணிகள் எலும்புடையவைகளாகவே இருக்கின்றன.

எளிய ஜீவன்களாகிய மீன்கள் முட்டையிடுகின்றன. ஆனால் அவை தமது முட்டைகளை அடை காப்பதில்லை. ஒரு தடவையில் அவை ஆயிரக்கணக்கான முட்டைகளையிட்டும் கவனிக்கப்படாமையால் அநேகமானவை அழிந்து போகின்றன. மிகச் சிலவே குஞ்சுகள் ஆகின்றன. உயர்ந்த பிராணிகளைப் பாருங்கள். அவை இடும் முட்டைகளோ மிகக் கொஞ்சம். ஆனாலும் அம்

முட்டைகள் நன்ருகப் பாதுகாக்கப்பட்டுக் குஞ்சுகளாகி விடுகின்றன.

இவற்றைவிடக் குட்டி இடுபவை இன்னும் மேலாகவே செய்கின்றன. அப்பிராணிகள் குட்டியைத் தங்கள் வயிற்றினுள்ளேயே வைத்து மிகவும் கவனத்தோடு பாதுகாக்கின்றன. நாய் முதலிய பிராணிகள் இப்படித்தானே செய்கின்றன. குட்டிகளைப் பெற்ற பிறகு அவற்றிற்குத் தாமே பால் கொடுத்து வளர்க்கின்றன. மேலும் இவை குட்டிகளை நன்ருகக் கவனமெடுத்து வளர்க்கின்றன. இவ்வித பிராணிகளிலே கூட வித்தியாசங்களைக் காணலாம். சிறிது நாட்களுக்குள் பூனை ஒரே முறையில் அதிக குட்டிகளை ஈனுகிறது. எப்படியோ அவற்றில் அநேக குட்டிகள் இறந்துபோகின்றன. யானையோ இருபது மாதம் தன் வயிற்றிலே பாதுகாத்து வைத்து ஒரே ஒரு குட்டியைத்தான் ஈனுகிறது. பிறகு மிகுந்த பக்குவமாகவும் காப்பாற்றி வளர்த்துவிடுகிறது.

ஆகவே பிராணிகள் பிறப்பில் உயர உயர இவ்விதமான வேறுபாடுகளை நாம் அவைகளிடம் காண்கிருேம். உயர்ந்த பிராணிகள் ஒரே ஒரு குட்டியையே ஒரு முறையில் ஈனுகின்றன. அதையும் மிகவும் கவனமாகவும், அன்பாகவும் வளர்க்கின்றன. எல்லாப் பிராணிகளிலும் மனிதனே மிகவும் உயர்ந்த பிராணி. அதனுல் மனிதர்கள் தங்கள் குழந்தைகளை மிகுந்த அன்பு பாராட்டி வளர்க்கிருர்கள்.

ஆதிமனிதன் இக்காலத்து மனிதர்களைப் போல இருந்திருக்க முடியாது. அவன் பாதி குரங்காகவும் பாதி மனிதனுகவுமே வசித்திருக்க வேண்டும். மனிதன் உலகில் தோன்றியபோது அவனைச் சுற்றிலும் பயங்கரமான பெரிய பெரிய மிருகங்கள் வாழ்ந்தன. அவற்றிற்குப் பயந்தே அவன் வாழ்ந்திருக்க வேண்டும். இக்

காலத்து மனிதன் உலகையே ஆளுகிறான். சிங்கம், புலி முதலிய கொடிய மிருகங்களை உற்சாகமாக வேட்டையாட இவனால் முடிகிறது. ஆனால் ஆதி மனிதனின் நிலையோ மிகவும் பரிதாபமானது. அந்தக் காலத்துப் பெரிய மிருகங்களுக்கும், மற்றும் ஜந்துக்களுக்கும் பயந்து பயந்துதான் அவன் வாழ்ந்தான். அவன் மெல்ல மெல்லத் தன் பகுத்தறிவின் உதவியினாலே இன்றைய நிலைக்கு வந்தான். பகுத்தறிவைப் பாவியாத மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இப்பொழுதுமே வித்தியாசத்தைக் காணமுடியவில்லை.

அந்த மனிதன் முதல் முதல் கண்டுபிடித்த அதிசயங்களுள் ஒன்று நெருப்பு. பழைய காலங்களில் இரண்டு சிக்கிமுக்கிக்கற்களை ஒன்றோடொன்று தேய்த்து நெருப்பை உண்டாக்கினார்கள். இந்த நெருப்பு அவனைப் பகை மிருகங்கள் அணுகாதபடியும் பாதுகாத்தது. இப்படியாக அவன் மிருகங்களை அடக்கி ஆளவும் படிப்படியாகத் தெரிந்துகொண்டான். ஆரம்ப காலத்தில் தன் பகைவரோடு எதிர்த்துப் போராட மனிதனிடம் ஆயுதம் ஒன்றும் இருக்கவில்லை. கல்லைத்தான் எடுத்து எறிய முடிந்தது. பிறகு அந்தக் கல்லைக் கொண்டே கத்தி, கோடரிபோன்ற ஆயுதங்களையும் செய்யக் கற்றுக்கொண்டான்.

அந்தக் காலத்தில் வீடுகளாவது கட்டிடங்களாவது இல்லை. மனிதன் மலைக் குகைகளிலேயே வசித்தான். பூமியை உழுது சமம் செய்து வாழவும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. பழங்களையும், விதைகளையும், தான் கொன்ற மிருகங்களின் மாமிசத்தையுமே சாப்பிட்டான். ஆனால் ஓர் அதிசயம்! அந்த மனிதன் கூர்மையான கல்லினாலான ஊசி முதலியவைகளால் தான் வசித்த குகைச் சுவர்களில் சித்திரங்கள் எழுதினான்.

அப்படி எழுதப்பட்ட சித்திரங்களை இன்றைக்கும் நாம் காணமுடிகிறது.

பூர்வீக மனிதன் தனக்கு வேண்டிய ஆயுதங்களை எல்லாம் கற்களினலேயே செய்துகொண்டு வாழ்ந்தான். அதுகாரணமாக அந்தக் காலத்தைக் கற்காலம் என்று நாம் அழைக்கிறேம்.

[தழுவல் : ஜவஹரின் கடிதங்கள்.]

வினக்கள் :

1. மனிதனும் ஒரு பிராணியா ? எவ்விதம் ?
2. ஆதி மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை ?
3. மனிதன் எவ்விதம் நாகரிகமடைந்தான் ?

14. அதிசயமான மரங்கள்

உலகிலே எத்தனையோ அதிசயங்கள் இருக்கின் றன. அவற்றுள் சில மரங்களைப்பற்றிய வரலாறுகள் நம்மைப் பிரமிக்கச் செய்து விடுகின்றன.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள சுவிற்செர்லாந்து தேசத்துக் காடுகளில் தண்ணீர் தருகிற ஒருவகை மரங் கள் காணப்படுகின்றன. அந்த மரங்கள் வளர்ந்து பருவமடைந்த பிறகு அவற்றை வெட்டினலும் துவாரஞ் செய்தாலும் அந்தக் காயத்தின் வழியாக நல்ல சுத்தமான தண்ணீர் வருகின்றது. சிறிது நேரத் துக்குள் குடக் கணக்காக அவை தண்ணீரைக் கொடுத்து விடுகின்றன. இப்படியான மரங்கள் இந்தியாவிலுள்ள காடுகளிலும் இருப்பதாகச் சொல்லுகிருர்கள்.

அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள சில தீவு களில் ஒருவகை மரங்கள் காணப்படுகின்றன. அவை களும் மழைபோல் இராக் காலங்களில் தண்ணீரைச்

சொரிகின்றன. அந்தத் தீவுகளில் நல்ல குடி தண்ணீர் கிடைக்காத காலத்தில் ஜனங்கள் மிகவும் கஷ்டப் பட்டார்களாம். நாளடைவிலே தான் காடுகளில் இந்த மரங்களைக் கண்டு பிடித்தார்கள். அந்த மரங்கள் நம் நாட்டிலே வளரும் முருங்கை மரத்தைப் போன்ற தோற்றமுடையன. நிழல்வாடி மரங்கள் போல அந்த மரங்கள் பகலில் வாடிச் சோர்ந்து நிற்கும். இரவு வந்ததும் தளிர்த்துச் செழிப்படைந்து காணப்படும். பொழுது சாயவும் நீர்த் திவலைகளைச் சிந்தத் தொடங்கி, பொழுது புலர்வதற்கிடையில் பெரு மழை பெய்வது போலத் தண்ணீரைக் கொட்டி விடுகின்றன. அங்கு வசிக்கும் மக்கள் அந்த மரங்களின் கீழ் தொட்டிகளைக் கட்டித் தண்ணீரை எடுக்கிறார்கள். அங்குள்ள ஒரு சிறிய தீவிலிருக்கும் இவ்வகையான மரங்களில் இருந்து ஒரு நாளில் சுமார் இருபதினாயிரம் கலன் தண்ணீர் எடுக்கிறார்களாம்.

தென்னமரிக்காவிலுள்ள காடுகளில் ஒருவகை மரம் பால் கொடுக்கிறது. அந்த மரத்தில் துவாரஞ் செய்தால் பால் வடிகிறது. அந்தப் பால் பசுவின் பாலைப்போலவே சகல குணங்களும் உடையதாக இருக்கிறது.

மற்றொருவகை மரங்கள் வடஅமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தில் காணப்படுகின்றன. அம் மரங்களிலும் துவாரங்கள் செய்து குழாய்களை வைத்துப் பால் எடுக்கிறார்கள். அந்தப் பால் கரும்பின் சாறு போன்ற சுவையுள்ளதாக இருக்கிறது. சர்க்கரை காய்ச்சவும் அது உதவும். அந்த நாட்டு மக்கள் மிகப் பழங் காலத்திலிருந்தே இந்த மரத்தின் உபயோகத்தைத் தெரிந்திருக்கிறார்கள்.

தென்னமரிக்காவிலுள்ள சில நதி தீரங்களில் வேறொரு வகை அதிசயமான மரங்கள் காணப்படு

கின்றன. இந்த மரங்களுக்கு நமது ஆல மரங்களுக்குப் போல விழுதுகள் இருக்கின்றன. அவை விழுதுகளை வேண்டும்போது நீட்டி, பக்கத்திலேயுள்ள நீர் நிலைகளிலிருந்து தண்ணீரைக் குடிக்கின்றன. தண்ணீர் குடித்து முடிந்ததும் அந்த விழுதுகளைச் சுருக்கிக் கொள்ளுகின்றன. வரண்ட காலங்களில் பக்கத்தில் தண்ணீர் இல்லாமற் போய்விடும். அப்போது அவை தண்ணீருக்காகக் காத்திருக்கும். அந்த நேரத்தில் யாராவது அதன் கீழ் தண்ணீரை ஊற்றினுல் மோப்பம் பிடித்து உடனே அந்த இடத்துக்கு விழுதுகளை நீட்டித் தண்ணீரைக் குடிக்கின்றன. பிறகு தமக்குத் தண்ணீர் தந்தவருக்கு நன்றி செலுத்துவது போல அசைந்து ஆடுகின்றனவாம்.

இதே கண்டத்திலுள்ள பிரேசில் என்ற தேசத்தில் பயங்கரமான காடுகள் காணப்படுகின்றன. அங்கே ஒரு வகை மரங்கள் உண்டு. அவை உயரத்தில் சிறியவை. இராக்காலங்களில் பிரகாசிக்கின்றன. அந்த ஒளியில் நன்ருகப் புத்தகங்களை வாசிக்க முடியுமாம். அமாவாசை போன்ற இருட்டுக் காலங்களில் அவற்றின் ஒளி வெகு தூரம் வரைக்கும் தெரியும் என்று சொல்லுகிருர்கள்.

நமது இந்தியா தேசத்தில் வங்காள நாட்டிலே உள்ள ஒரு தோட்டத்தில் ஒருவகை ஈச்ச மரங்கள் நிற்கின்றன. அவை இரவு வந்ததும் சரிந்து படுத்துப் பின் காலையில் எழும்புகின்றன. அதாவது சூரியன் மேற்கே சாயச் சாயத் தாமும் சரிந்து போய் இரவு முழுவதும் படுத்துக் கிடந்துவிட்டுக் காலையில் பொழுது உதயமானதும் மெல்ல மெல்ல எழுந்து விடுகின்றன.

மனிதர்களுக்கும் மற்றும் பிராணிகளுக்கும் பயங்கரமான தீங்கு செய்யும் மரங்களும் சில இடங்களிலே காணப்படுகின்றன. வட அமெரிக்காவிலுள்ள மெக்ஸிக்

கோவில் மனிதர்களையும் பிராணிகளையும் கொல்லுகிற பாஷாணக் காற்றை வெளியே விடும் ஒரு மரத்தைக் கண்டு பிடித்தார்கள். அந்த மரத்தின் கீழ் ஆடுமாடுகள், காட்டு மிருகங்கள், பறவைகள், அணில் போன்ற அநேக பிராணிகளது எலும்புக் கூடுகள் கிடந்தன. மரத்தின் தன்மையை அறியாமல் அவற்றைப் பார்க்கச் சென்ற ஒரு இளைஞன் தன் குதிரையோடும் மயங்கி மாண்டு போனான். அவனைத் தேடிச் சென்றதினாலேயே இந்த விஷக்காற்றைப் பரப்பும் மரத்தைக் கண்டு பிடித்தார்கள். அது பரப்பும் விஷத்தோடு கலந்த காற்றைச் சுவாசித்த உடனே பிராணிகளது இரத்த நரம்புகள் வெடித்து விடுகின்றனவாம். இப்படியான மரங்கள் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள போர்த்துக்கல் தேசத்துக் காடுகளிலும் காணப்படுகின்றன.

இன்னும் ஒருவகை மரங்கள் தென்னாபிரிக்கக் காடுகளில் காணப்படுகின்றன. அவற்றை வெட்டினால் அல்லது காயப்படுத்தினால் உடனே அந்த வேலையைச் செய்தவர்களை இடைவிடாமல் தும்மும்படி செய்து விடுகின்றதாம்.

இன்னும் எத்தனை அதிசயமான மரங்கள் மனிதர்களால் அறியப்படாமல் இருக்கின்றனவோ? ஆண்டவனுடைய படைப்பிலுள்ள விநோதங்கள் எல்லாவற்றையும் நாம் எப்படி அறிந்துவிட முடியும்?

வினாக்கள்:

1. தண்ணீர் தரும் மரங்களைப் பற்றிச் சொல்லுக.
2. தண்ணீர் குடிக்கும் மரங்களைப் பற்றி என்ன அறிவீர்?
3. மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் தீங்கு செய்யும் மரங்களின் தன்மைகள் என்ன?

15. சிகிரியா

இலங்கையின் வடமத்திய மாகாணத்திலே சிகிரியா என்னும் மலைக் குன்று இருக்கிறது. அதன் நாற்புறமும் பசிய மரக்காடுகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. அந்தப் பசிய காடுகளின் நடுவே சிகிரியாக் குன்று அமைந்திருப்பதால் அது பார்ப்பதற்கே மிக அழகாக இருக்கிறது.

செங்குத்தாக நிமிர்ந்து நிற்கும் இந்தக் குன்று மேலே போகப் போக அகன்றிருக்கிறது. இதன் உயரம் ஆக அறுநூறு அடிதான். சிகிரியாவின் அடிப் பாகம் சுமார் ஒன்றரை மைல் இருக்கும். மேலே உள்ள தட்டையான பாகம் நான்கு ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது.

சாந்திலுல் கட்டப்பட்ட படிக்கட்டுகள் சிகிரியாவின் மேற்குப் புறத்தில் அமைந்திருக்கின்றன. அந்த வழி குன்றினைச் சுற்றிச் சுற்றி வந்து கிழக்குப் பக்கத்தில் ஒரு தட்டையான இடத்தில் முடிவடைகிறது. அங்கிருந்து மற்றொரு படிக்கட்டுத் தொடர்ந்து செல்லுகிறது. நெற்பதர் கலந்த சாந்திலுல் அந்தக் காலத்திலே கட்டப்பட்ட இந்தப் படிக்கட்டானது இன்னும் கருங்கல் போலக் கடினமாகவே இருப்பதைக் காணலாம். படிக்கட்டுகளின் முடிவிலே சாந்திலுல் செய்யப்பட்ட ஒரு சிங்கம் இருக்கிறது. சிங்கத்தின் உருவம் இருப்பதலுலே இக்குன்று சீயகிரி என்ற பெயரைப் பெற்றது. அந்தப் பெயர் நாளடைவில் மாறிச் சிகிரியா என்று வந்து விட்டது.

குன்றின் உச்சியிலே பெரிய கருங்கற்பாறை ஒன்றைப் பிளந்து செய்திருக்கும் அரண்மனையைக் காணலாம். அதோடு கருங்கல்லிலே குடைந்து செய்யப்பட்ட நீர்த் தொட்டியும் ஒன்று இருக்கிறது.

அரண்மனையின் உள்ளே உள்ள அறை ஒன்றில் அழகான பல ஓவியங்கள் வரையப் பட்டிருக்கின்றன.

ராஜ கன்னி ஒருத்தி ஆண்டவனை வழிபடச் செல்லுகிறாள். அவள் பின்னால் ஒரு தோழி மலர்களை வைத்த தட்டொன்றை ஏந்திச் செல்லுகிறாள்.

இப்படி இன்னும் பல சிறந்த ஓவியங்கள் அங்கே இருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் போற்றாத மனிதர்கள் இல்லை. இந்த ஓவியங்கள் இந்தியாவிலுள்ள அஜாந்தா முதலிய இடங்களிலே வரையப்பட்ட ஓவியங்கள் போன்றவை. ஆயிரக் கணக்கான வருஷங்கள் சென்றாலும் அழிந்து போகாத வர்ணங்களால் இவற்றை எழுதியிருக்கிறார்கள். இந்த ஓவியங்களில் சித்திரக் கலையின் உயர் நிலை நிறைந்து கிடப்பதை இன்னும் காணலாம்.

சிகிரியாவின் தென்புறத்திலே தாமரைக் குளம் ஒன்று இருக்கிறது. அது முன்னே சிகிரியாவைச் சூழ்ந்திருந்த அகழியின் ஒரு பாகமாகவே இருக்க வேண்டும். காசியப்பன் அங்கே இருந்து அரசாண்ட காலத்தில் செழிப்புடன் விளங்கிய வயல் நிலங்களிலேயே இன்று காடுகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன.

ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முன் தன் தந்தையான தாதுசேனனை உயிருடன் சுவருக்குள் வைத்துக் கட்டி அரசைக் கைப்பற்றிய காசியப்பனே சிகிரியாவைத் தனது ராஜதானியாக வைத்துக் கொண்டான்.

அக்கிரமக்காரனான இந்தக் காசியப்பனே சிகிரியாவின் பிரசித்தி பெற்ற சித்திர மண்டபத்தை ஆக்கினான். அவனுடைய கொலை யுள்ளத்திலும் அழகுக் கலைக்கு இடமிருந்தது. அவனால் இலங்கைக்கு அழியாத புகழும் கிடைத்து விட்டது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இக்குன்றைப் பார்க்க வெளி நாடுகளிலிருந்தும் அநேகர் வருஷந்தோறும் வருகிறுர்கள். அழகான அந்தக் குன்றையும், அதிலுள்ள கோட்டையையும், ஓவியங்களையும் பார்த்து எல்லோருமே வியப்படைகிறுர்கள்.

காசியப்பன் எவ்வளவு கெட்டவனுக இருந்த போதிலும் எதிர் காலத்து இலங்கை மக்கள் தன்னை நினைக்கும்படி செய்து விட்டான்.

வினுக்கள் :

1. சிகிரியாவின் அமைப்பு எவ்விதமானது?
2. சிகிரியா எதனுல் விசேஷமானது?
3. சிகிரியா எதனுல் சரித்திரப் பிரசித்தமானது?

16. நேபரும் டேகரும்

மிகவும் சிறந்த குதிரைகள் அரேபியாவில் உண்டு. வெகு காலத்துக்கு முன்னர் நேபர் என்ருெரு அராபியனிடத்திலே ஒரு குதிரை இருந்தது. அது மிகவும் வேகமாக ஓடக்கூடியது. அதிக அடக்கமும் அழகும் உடையது. கண்டவர்கள் அதை மறக்கமாட்டார்கள். சிறந்த குதிரை அது.

அராபியர்களில் வேறு ஒரு மரபைச் சேர்ந்த டேகர் என்பவன் அந்தக் குதிரையின் மீது ஆசை கொண்டான். அதை எவ்விதத்திலாவது பெற்றுவிட வேண்டும் என்று எண்ணினுன். தன்னிடத்திலுள்ள ஒட்டகங்கள் முழுவதையும் கொடுப்பதுடன் வேண்டிய அளவு திரவியம் அந்தக் குதிரைக்கு விலையாகக் கொடுப்பதாக நேபரிடம் சொல்லி அனுப்பினுன். ஆனுல் நேபர், "உலகம் முழுவதையும் கொடுப்பதானுலும் என் குதிரையை விற்க முடியாது" என்று

மறுத்துவிட்டான். டேகர், சூழ்ச்சியினாலாவது அக் குதிரையைப் பெற்றுவிட வேண்டும் என்று எண்ணி நேபரை வஞ்சிக்கக் கருதினான்.

டேகர், எழுந்து நடக்கமுடியாத ஒரு முடவனைப் போல மாறு வேஷந் தரித்துக் கொண்டு, நேபர் தன் குதிரையில் வழக்கமாகப் போகும் பாதையில் ஒரு மர

நிழலிலே உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்தில் நேபர் தன் அழகிய குதிரையின் மீது அவ்வழியால் வந்தான். அவன் கிட்ட வந்ததும், "ஐயா! நான் ஒரு முடப் பிச்சைக்காரன். ஊர் ஊராகத் திரிந்து பிச்சை

எடுப்பவன். இரண்டு மூன்று நாட்களாக என்னால் இவ் விடத்தை விட்டு நகர முடியவில்லை. பசியினால் இறந்து விடுவேன் போல இருக்கிறது. மயக்கம் உண்டாகிறது. என்னை எடுத்துச் சென்று அடுத்த கிராமத்தில் விட்டு விட்டால் நான் பிழைத்துக் கொள்வேன். ஓர் உயிரைக் காத்த புண்ணியம் உங்களுக்கு உண்டாகும்" என்று எவரும் இரங்கும்படி அழுதுகொண்டே டேகர் கூறினான்.

அவனது சூழ்ச்சியை அறியாத நேபர் அவன் சொன்னவற்றை மெய்யென நம்பி, "அப்படியானால் இந்தக் குதிரையின்மேல் ஏறிக் கொள். நீ எங்கு போக வேண்டுமோ அங்கே கொண்டுபோய் விடுகிறேன். அல்லது எனது வீட்டிற்கே அழைத்துச் சென்று, உனக்குச் சிகிச்சையும் உணவும் அளித்துக் காப்பாற்று கிறேன்" என்று கூறினான்.

"எனக்கு மயக்கமாக இருக்கிறது. என்னால் நகர முடியவில்லை" என்று கூறி, மயக்கமடைந்து விழுந்து விடுவதுபோல டேகர் நடித்தான். நேபர் தன் குதிரையை விட்டு இறங்கி அவனுக்குக் கிட்ட வந்து, மிகவும் ஆதரவுடன் பக்குவமாக அவனை எடுத்துக் குதிரையின் மீது வைத்தான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள விரும்பிய டேகர் குதிரையைத் தனது காற்குதி முள்ளினால் தூண்டிவிட்டான். குதிரை யும் வேகமாகக் கிளம்பிற்று.

அப்பொழுது டேகர், "பைத்தியக்கார நேபரே! குதிரை என்னுடையதாய் விட்டது. போய் வரும்படி உனக்கு விடை தருகிறேன்" என்று கூறிக்கொண்டே குதிரையை வேகமாகத் தட்டி விட்டான். இதைக் கேட்டதும் நேபர் துக்கத்தாலும், ஆச்சரியத்தாலும் திகைத்து நின்றான். பிறகு, "ஒரு விஷயம் சொல்ல

வேண்டும். குதிரையை நிறுத்து" என்று கூவிக் கொண்டே டேகரின் பின்னுல் ஓடினுன்.

"நேபர் இனி என்னை என்ன செய்யமுடியும்?" என்று டேகர் எண்ணிக்கொண்டு, சிறிது தூரத்தில் நிறுத்தி, "என்ன விஷயம்?" என்று கேட்டான்.

அதற்கு நேபர், "எனது குதிரை உனதாய் விட்டது. அதையிட்டு நான் இனித் துக்கிக்க மாட்டேன். ஆனுல், இந்தக் குதிரையை நீ பெற்றுக் கொண்ட வகையை மட்டும் ஒருவருக்கும் சொல்லாதே" என்ருன்.

"சொல்வதால் என்ன நஷ்டம்?" என்று டேகர் கேட்டான்.

"சில ஏழைகள் உண்மையாகவே நோயினுல் வருந்தி வீதிகளில் கிடப்பதுண்டு. நீ இந்தச் சம்பவத்தை மற்றவர்களுக்குச் சொல்வதால் எப்படிப் பட்ட காருண்யம் உடையவர்களும் இனி அந்த ஏழை களுக்கு உதவி செய்யமாட்டார்கள். அவ்விதம் உபகாரத்துக்கு இடையூறு நேர்ந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே உன்னை இவ்விதம் கேட்டுக் கொண்டேன். நீ சுகமே போய் வா" என்று நேபர் கூறினுன்.

இதைக் கேட்டதும் டேகர் வெட்கமும் அவமான மும் மேலிட்டுக் குதிரையிலிருந்து இறங்கி, அதை நேபரிடம் கொடுத்தான். பிறகு, "நீரே உமது குதிரையை வைத்துக் கொள்ளும். எவ்விதத்திலும் தருமத்துக்கு இடையூறு செய்ய என் மனம் துணிய வில்லை. எனது கூடாத செய்கைக்காக என்னை மன்னிக்க வேண்டும்" என்ருன்.

கண்ணிழந்தவன் திரும்பவும் கண்களைப் பெற்றது போல நேபர் ஆனந்தங் கொண்டான். ஒருவனைத் தீய

வழியினின்றும் நல்வழிக்குத் தனது சுயநலமற்ற வார்த்தைகளால் கொண்டு வந்ததையிட்டு இன்னும் அதிக சந்தோஷமடைந்தான். டேகரை மன்னித்து, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, விருந்தளித்தான். சில நாள் வரை நன்றாக உபசரித்த பிறகே அவனை அவனது வீட்டுக்கு அனுப்பினான். அதன் பிறகு இருவரும் உண்மை நண்பர்களாக இருந்தார்கள்.

வினாக்கள் :

1. டேகர் எவ்விதம் குதிரையைக் கைப்பற்றினார் ?

2. குதிரையைப் பெற்றுக்கொண்ட விதத்தை எவருக்கும் சொல்லவேண்டாம் என்று நேபர் டேகரைக் கேட்டுக் கொண்டதேன் ?

3. இந்தக் கதையிலிருந்து நாம் அறிவதென்ன ?

17. பாலை நிலங்கள்

மழையின்றி, புல் பூண்டு செடி கொடிகள் ஒன்றுமே இல்லாத பாழ்நிலங்களையே பாலை நிலங்கள் என்று அழைக்கிறார்கள். உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள கண்டங்களிலே அநேக பயங்கரமான பாலைநிலங்கள் காணப்படுகின்றன. அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஆசியாக் கண்டங்களிலே காணப்படும் பாலைகளைக் காட்டிலும் ஆபிரிக்காவிலிருக்கும் சகாராப் பாலைநிலம் மிகவும் பயங்கரமானது. அதை நினைத்தாலே மனம் நடுங்கும். உணர்ச்சிகள் வெந்து போகும். அது சுமார் மூவாயிரம் மைல் நீளமும் தொளாயிரம் மைல் அகலமுங்கொண்டது. எந்தத் திசையை நோக்கிப் போனாலும் போகப் போக மணலின் பயங்கரத் தோற்றத்தைத் தவிர அங்கே வேறொன்றையும் காணமுடியாது.

அங்கே பகலில் தாங்கமுடியாத உஷ்ணமும் இரவில் மிகமோசமான கடுங்குளிரும் காணப்படும்.

உஷ்ணத்தால் கொதிக்கும் மணலில் அரிசியைக் களைந்து வைத்துவிட்டால் சிறிது நேரத்துள் அது சோருகிவிடுமாம். அந்த உஷ்ண நிலையைப் பற்றி நினைக்கவும் மனம் பதறுகிறதல்லவா ? பகற்காலத்து உஷ்ணத்தால் விரிந்திருக்கும் பாறைகள் இரவில் காணப்படும் கடும் குளிரினால் வேகமாகச் சுருங்குகின்றன. அப்போது அவை இடியின் பயங்கர ஒலியோடு வெடித்துப் பிளந்து போகும். இவ்வித குளிர், உஷ்ண பேதங்களால் திடீர் திடீர் என்று பெரும்புயல்களும், சுழலுங் கொடுங் காற்றுக்களும் உண்டாகின்றன. அங்கே வீசும் பயங்கரப் புயலானது நெருப்பைக் கக்குவது போன்ற உஷ்ணத்தோடு, உருகிய லோகங்களைப் போலக் கொதிக்கும் மணலை வாரி இறைத்துக்கொண்டு வீசும். இவ்வகைப் புயல்களால் அடிக்கடி மணல் வேறு வேறிடங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. அப்படி ஒதுக்கப்பட்ட மணல் மேட்டில் யாராவது தவறிக் காலை வைத்துவிட்டால் உடனே புதைந்து மறைந்து விடுவார்கள்.

அங்கே வீசும் சுழல் காற்றுக்களோ இன்னும் பயங்கரமானவை. அவற்றைத் தடுக்க எதற்குமே சக்தி கிடையாது. சுழன்று சுழன்று வீசும் இந்தக் காற்றானது மணலை வாரிச் சுருட்டி மைல் கணக்காக உயரக் கொண்டு போய், பெரிய தம்பங்களாக நிறுத்தி வைத்துக்கொள்ளுகிறது. சில சமயங்களில் அந்தச் சூறைக் காற்றானது மலைபோலக் குவிந்து கிடக்கும் மணல் மேட்டுடன் அகப்படும் பொருள்களை எல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு வெறிகொண்ட அரக்கரைப் போல, அங்குமிங்கும் ஓடித் திரியும். அதை நினைக்கவே மனம் கூசுகிறது. வழியில் எதிர்பாராமல் அகப்பட்டுக் கொள்ளும் ஒட்டகம்

முதலிய பெரிய பிராணிகளும் அந்தக் காற்றுக்கு ஒரு துரும்பு போலவே ஆகி விடுகின்றன.

இப்படியான பயங்கரப் பாலைகளுக்கு ஊடாக யாத்திரீகர்களும், வியாபாரிகளும் செல்லவேண்டியே இருக்கிறது. அவர்களது பிரயாணம் ஒவ்வொரு நிமிஷமும் நடுக்கத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். பாலைகளில் காற்றின் வெப்பம் மிக அதிகரித்தாலும், காற்றுச் சலனமற்றிருந்தாலும், எங்கேயாவது ஒரு முகில் தெரிந்தாலும் அபாயம் வந்து விட்டதென்று பிரயாணிகள் துடிப்பார்கள். இப்படி எதிர்பாராத அபாயங்கள் வரும்போது ஒட்டகங்கள் அதை அறிந்து விடுகின்றன. உடனே அவை வாயையும், மூக்கையும் மணலிலே புதைத்துக்கொண்டு அபாயம் வரும் திசையை நோக்கிக் குப்புறப் படுத்து விடுகின்றன. அதைக்கண்ட பிரயாணிகளும் கம்பளிகளால் மூடிக் கொண்டு அந்த ஒட்டகங்களின் பக்கத்தில் ஒட்டிக் கொண்டு கிடந்து விடுவார்கள். எப்படிப் பக்குவமாக மூடிக்கொண்டு கிடந்தாலும் அந்தக் காற்று அள்ளி வீசும் மணல் வாய், மூக்கு எங்கும் நுழைந்து பெரிய கஷ்டத்தையும், நாவரட்சியையும் உண்டுபண்ணி விடும். அந்தச் சமயங்களிலே பிரயாணிகள் தோற்பைகளில் நிறைத்துக் கம்பளிகளினல் சுற்றி வைத்திருக்கும் பாதுகாப்பான நீரும் கொதித்து வெந்நீராகி விடும். அந்த வெந்நீரைக் குடித்தாலும் தாகந் தீராது. அப்படியான சமயங்களில் இருதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கி விடுகிறது. சிறிது நேரத்துள் மூச்சுப் பெருமூச்சாக மாறி மெல்ல மெல்ல நின்று விடுகிறது.

சகாராவில் இப்படி நிலை தளர்ந்து மரணத்தோடு போராடிக்கொண்டு சோர்ந்து விழும் பிராணிகளையோ மனிதர்களையோ உண்ணுவதற்காக எங்கிருந்தோ

கழுகின் கூட்டங்கள் வந்து விடுகின்றன. வந்த அக் கூளிகள் குற்றுயிராகக் கிடக்கும் அந்த நிலையிலேயே உண்ணத் தொடங்கி விடுகின்றனவாம். இப்படி இறந்து கிடக்கும் பிராணிகளுடைய ஆயிரக்கணக்கான எலும்புக் கூடுகளை அந்தப் பாலைநிலப் பாதைகளிலே காணலாம்.

இவ்விதமான பாலை நிலங்களில் இடையிடையே நீரூற்றுகளுள்ள பசுமையான இடங்களும் காணப் படுகின்றன. அவற்றைப் பாலைநிலப் பசுந்தரைகள் என்று சொல்லுகிறார்கள். அவ்விடங்களில் பேரீந்து முதலிய தாவரங்கள் செழித்து வளருகின்றன. மனிதர் களும் வசிக்கிறார்கள். பாலை நிலங்களில் பிரயாணஞ் செய்வோர் இவ்விதமான இடங்களை இலக்காக வைத்துக்கொண்டே போகிறார்கள்.

சாதாரணமாகப் பாலைகளிலே பெய்யும் மழையின் அளவு மிகவும் குறைவு. ஆனால் பத்து, இருபது வருஷங்களுக் கொருமுறை மிகப் பெரிய மழை பெய்கிறதாம்.

கூளிகள்

வினாக்கள் :

1. பாலைநிலங்கள் ஏன் பயங்கரமானவை ?

2. பாலைநிலங்களில் ஏற்படும் இயற்கைச் சுவாத்திய மாறுபாடு களினால் பாலைநிலங்களில் எவ்வெவ் விதமான நிலைமாற்றங்கள் ஏற் படுகின்றன?

3. பாலைநிலங்களுக்கூடாகப் பிரயாணம் செய்வோர் எவ்வித மான அநுபவங்களைப் பெறுகிறார்கள் ?

4. அபாயம் வரும் என்று தெரிந்தும் பாலைநிலங்களினூடாக ஏன் பிரயாணஞ் செய்கிறார்கள் ?

18. பூர்வீக நாகரீகம்

ஆதி மனிதர்களான கற்காலத்தவர்களை விட அதன் பிறகு வாழ்ந்த பூர்வீக மனிதர்களைப் பற்றி அதிகமான விஷயங்களை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பெரிய கட்டிடங்கள் பாழாகிக் கிடப்பதை இன்றைக்கும் நாம் காணலாம். அந்தக் கட்டிடங்கள், கோவில்கள், அரண்மனைகளைப் பார்க்கும்போது அந்தக் காலத்தவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை ஓர் அளவிலாவது அறியமுடிகிறது. பிரதானமாக இக்கட்டிடங்களிலே காணப்படும் சிலைகள், சிற்பவேலைகள் என்பன அவர்களைப்பற்றி அறிய மிக உதவியாக இருக்கின்றன. அந்தச் சிலைகளிலிருந்தும் பழைய காலத்து மனிதர் எப்படி உடை தரித்தார்கள், எதை அணிந்தார்கள் என்பன போன்ற சில விஷயங்களை அறிய முடிகின்றது.

முதல் முதலில் மனிதர்கள் எங்கே குடியேறி நாகரீகத்தை வளர்த்தார்கள் என்பதை நாம் நிச்சயமாகச் சொல்லமுடியாது. வட அமெரிக்க மெக்சிக்கோ நாட்டிலுள்ள யுகடான் என்ற இடத்திலும், தென் அமெரிக்க பீரு தேசத்திலும் சிதைந்துபோன பழைய கட்டிடங்கள் காணப்படுகின்றன. ஆகவே அந்த இரு நாட்டிலும் மிகப் பழங்காலத்தில் நாகரீகமடைந்த மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது. அவர்களைப்பற்றி அதிகமான விபரங்கள் ஒன்றுமே கிடைக்காததால் வேறு விசேஷம் ஒன்றையும் சொல்ல முடியவில்லை.

ஐரோப்பாவும் ஆசியாவும் சேர்ந்த யூரேஷியாவிலே மெஸப்பத்தேமியா, எகிப்து, கிரீட், இந்தியா, சீனம் போன்ற நாடுகளிலேதான் பண்டைக்காலத்தில்

ஓ9332

நாகரீகம் முதல் முதல் தோன்றியது. எகிப்து தேசம் ஆபிரிக்காவிலே இருப்பினும் அது ஐரோப்பாவையும் ஆசியாவையும் அடுத்து இருக்கிறது.

எங்கே சென்ருல் உணவுப் பொருள்களை லேசாகப் பயிரிட்டு விளைவிக்கலாமோ அப்படியான இடங்களைத் தேடித் தேடி நாடோடிகளான பூர்வீக மனிதர்கள் குடியேறினார்கள். அந்த மனிதர்களுக்கு விவசாயம் செய்யத் தெரியும். விவசாயத்துக்கு நீர்வளம் அவசியம் வேண்டும். மழையை மட்டும் நம்பி அவர்களால் வாழ முடியாதிருந்தது. நதிகளை அடுத்த இடங்களே விவசாயத்துக்கு ஏற்றவை என்பதையும் அவர்கள் நன்ருகத் தெரிந்திருந்தார்கள். அதனுலே தான் அவர்கள் நதிகளை அடுத்த பிரதேசங்கள் எங்கெங்கே காணப்பட்டனவோ அங்கெல்லாம் குடியேறினார்கள்.

மெஸப்பத்தேமியாவில் 'யூப்பிறெற்றீஸ்', 'டைகிறீஸ்' நதிகளுக்கிடையிலுள்ள செழிப்பான இடத்தில் ஒரு பகுதியார் குடியேறினர். இன்னும் ஒரு பகுதியார் எகிப்து தேசத்தின் 'நைல்' நதிக் கரையில் குடியேறினார்கள். மற்ருெரு கூட்டத்தவர் இந்தியாவிலுள்ள கங்கை, யமுனை, சிந்து நதிக்கரைகளில் குடியேறினார்கள். இப்படியே சீனு முதலிய இடங்களிலும் செழிப்பான நதிக்கரைகளில் ஆதியில் மக்கள் குடியேறினார்கள்.

அவர்கள் குடியேறிய இடங்களில் பெரிய பெரிய நகரங்கள் உண்டாயின. தங்களுக்கு உணவையும் செல்வத்தையும் அளித்த நதிகளை அவர்கள் புனிதமாகவே கருதினார்கள். அவர்களது வாழ்க்கைக்கு நீர் அவ்வளவு அவசியமாக இருந்தது. எகிப்து தேசத்தில் நைல் நதியையும், இந்தியாவில் கங்கை, யமுனை முதலிய நதிகளையும் அவர்கள் தாய் தந்தையரைப் போலப் போற்றி வந்தார்கள். நதிகளினுல் தாங்கள் அடைந்த

நன்மைகளை நினைத்தே அவர்கள் இந்த நதிகளை யெல்லாம் தெய்வமாக நினைத்து வழிபாடு செய்து வந்தார்கள் எனலாம்.

பண்டைக்காலத்து மக்களின் பெரிய நகரங்கள் எல்லாம் நதிக்கரைகளை அடுத்தே கட்டப்பட்டன. மெஸபத்தேமியாவில், பாபிலோன், நினெவே, அசர் என்ற நகரங்கள் பிரசித்தி பெற்றிருந்தன. ஆயினும் வெகு நாட்களுக்கு முன்பே அவை அழிந்து போயின. தற்காலத்தில் அந்த இடங்களைத் தோண்டிப் பார்க்கும் போதே பாழடைந்த அந்த நகரங்களின் அமைப்பும், கட்டிடங்களின் தன்மைகளும் தெரிகின்றன.

ஸிரியா தேசத்திலுள்ள டமஸ்கஸ் நகரம் மற்றொரு பிரசித்திபெற்ற பழம் நகரமாகும். ஆனால் டமஸ்கஸ் அழிந்து போகவில்லை. இன்றைக்கும் அது ஒரு பெரிய நகரமாகவே விளங்குகிறது. உலகில் உள்ள எல்லா நகரங்களிலும் இந்த டமஸ்கஸ் நகரமே மிகவும் புராதனமானது என்று சொல்லுகிறார்கள்.

இந்தியாவிலும் மிகப் புராதனமான நகரங்கள் நதிக்கரையை அடுத்தே அமைந்துள்ளன. இந்திரப் பிரஸ்தம், வாரணசி என்ற காசி நகர், பிரயாகை என்ற அலகாபாத் நகர், கயா என்ற பாட்னு நகர் புராதன இந்திய நகரங்களில் சிறந்தவை.

இவ்விதமே சீனதேசத்திலும் பல புராதன நகரங்கள் நதிக் கரைகளையடுத்து இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மைல் நீளத்திலே, மலைபோலக் கட்டப் பட்டிருக்கும் சீனப் பெரு மதில் புராதன சீன தேசத்து மக்களின் நாகரீகத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக இன்றைக்கும் நிற்கிறது.

[தழுவல் : ஜவஹரின் கடிதங்கள்.]

விவசாயம்.

வினாக்கள் :

1. பூர்வீக மனிதர்களின் நாகரீகத்தை எவ்விதம் அறிய முடிகிறது ?

2. நதிக்கரைகளை அடுத்தே பூர்வீக நாகரீகம் பிறந்து வளர்ச்சியடைந்த காரணம் என்ன ?

3. ஒவ்வொரு தேசத்தினது பூர்வீக நாகரீகத்தை எவ்விதம் கண்டறியலாம் ?

19. அசுரர்கள்

அச்சத்தை வேட்கை தனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும் ;
மிச்சத்தைப் பின் சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரண மில்லை ;
துச்சமெனப் பிறர் பொருளைக் கருதலாலே,
சூழ்ந்ததெலாங் கடவுளெனச் சுருதி சொல்லும்
நிச்சய மா ஞானத்தை மறத்தலாலே,
நேர்வதே மானுடர்க்குச் சினத் தீ நெஞ்சில்.

சினத்தின் கேடு

சினங் கொள்வார் தமைத் தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவாரொப்பாவார் ; சினங் கொள்வார் தாம்
மனங் கொண்டு தங் கழுத்தைத் தாமே வெய்ய
வாள் கொண்டு கிழித்திடுவார் மானுவாராம்.
தினங் கோடி முறை மனிதர் சினத்தில் வீழ்வார்,
சினம் பிறர்மேற் றாங் கொண்டு கவலையாகச்
செய்த தெணித் துயர்க் கடலில் வீழ்ந்து சாவார்.

தேம்பாமை

“ வட கோடிங்குயர்ந்தென்னே, சாய்ந்தா லென்னே,
வான் பிறைக்குத் தென்கோடு” பார்மீதிங்கே,
விடமுண்டுஞ் சாகாமலிருக்கக் கற்ருல்,
வேறேது தான் யாதாயினெமக்கிங் கென்னே?
திடங் கொண்டு வாழ்ந்திடுவோம், தேம்பல் வேண்டா;
தேம்புவதிற் பயனில்லை, தேம்பித் தேம்பி
இடருற்று மடிந்தவர்கள் கோடி கோடி
எதற்குமினி அஞ்சாதீர் புவியிலுள்ளீர்.

“ பாரதியார் ”

20. ராஜா ராம் மோஹன் ராய்

வங்காளத்தில் மூர்ஷிதபாத் என்ற ஜில்லாவில் 1774-ம் ஆண்டு ராஜா ராம் மோஹன் ராய் பிறந்தார். பெற்ரேராகிய ராமகாந்தரும், தாரிணி தேவியும் குழந்தைக்கு ராம் மோஹனர் என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

ராம் மோஹனர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப் பட்டார். அந்தப் பருவத்திலேயே அவருக்கு விவாகம் செய்து வைத்தார்கள். ஆனல் சிறிது காலத்தில் மனைவி இறந்து விட்டாள்.

பள்ளிக்கூடத்தில் வங்காள பாஷையோடு பாரசீகம், அரபு முதலிய பாஷைகளையும் கற்ருர். பிறகு சமஸ்கிருதம் கற்றுத் தேர்ந்தார். கிரேக்கு, லத்தீன் முதலிய பாஷைகளையும் கற்ருர்.

பல பாஷைகளையும் கற்ற ராம் மோஹனர் இந்து மதம், இஸ்லாமிய மதம் ஆகிய இரு மதங்களின் தத்துவங்களையும், உண்மைகளையும் அறிந்தார். போலி

ஆசாரங்களையும், மூடக் கொள்கைகளையும் கண்டித்துப் பேசினர். பல கட்டுரைகள் எழுதினர். கோவில்களில் தேவ தாசிகளின் நடனம், விக்கிரக ஆராதனை என்பன கூடாது எனக் கண்டித்துப் பாரசீக மொழியில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இதனல் வைதிகரான தம்

தந்தையாரின் கோபத்தைப் பெற்றார். வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இளம் வயதில் பெற்றோர்களைத் துறந்து ராம் மோஹனர் வெளியேறினர். கால் நடையாகவே இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார்.

அக்காலத்தில் திபெத் என்னும் இடத்துக்குச் சென்றார். திபெத் வாசிகள் பௌத்தர்கள். அவர்களிடம் காணப் பட்ட மூட வழக்கத்தை ராம்மோஹனர் கண்டிக்க ஆரம் பித்தார். அதனால் அவர்களால் வெறுக்கப்பட்டுத் தாய் நாடு திரும்பினார்.

மகன் பிரிந்து சென்றதைக் கண்டு ராமகாந்தர் மனம் வருந்தினார். ராம் மோஹனர் திபெத்திலிருந்து திரும்பி வந்ததும் அவரை அழைத்து ராமகாந்தர் வேறொரு விவாகஞ் செய்து வைத்தார். மறுபடியும் ராம் மோஹனர் மதத்தினதும், சமூகத்தினதும் மூடக் கொள்கைகளை எதிர்க்க ஆரம்பித்தார். அதன் பயனாகப் பிறகும் பெற்றோரின் விரோதத்தைப் பெற்றார். தன் மனைவியோடும் ஒரு குழந்தையோடும் வீட்டை விட்டு வெளியேறினார்.

பல பாஷைகளிலும் பாண்டித்தியம் உடைய ராம் மோஹனர் சீக்கிரத்திலே ஒரு சமஸ்தானத்தில் உத்தியோகம் பெற்றார். சில நாட்களில் திவான் என்ற பதவியைப் பெற்றார். சில வருஷங்களில் பதவியில் இருந்து நீங்கி வேதாந்த விசாரணையில் ஈடுபட்டார்.

திவானாக இருக்கும்போதே வருஷந்தோறும் பதி னாயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய ஜமீன் ஒன்று வாங்கியிருந்தார். பதவியை விட்டபோது தகப்ப னாருடைய சொத்துக்களும் ராம்மோஹனருக்கு உரித் தாயின. அவர் கல்கத்தா சென்று சமய ஆராய்ச்சி களில் ஈடுபட்டார்.

'வேத மந்திரம்', 'ஆத்மீய சங்கம்' என்பன போன்ற சங்கங்களை ஸ்தாபித்தார். அவற்றின் மூலம் பல கூட்டங்கள் கூட்டினார். இந்துமத உண்மைகளை யும், வேதங்களின் மெய்ப் பொருளையும் தான் மட்டு

மன்றி, பல அறிஞர்களைக் கொண்டும் மக்களுக்குப் புகட்டினார்.

1828-ம் ஆண்டில் தமது மதாசார முயற்சிக்குத் துணையாக நின்ற நண்பர்களின் உதவியோடு பிரம்ம சமாஜம் என்னும் புதிய மதஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபித்தார். இப் பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளைப் பொது ஜனங்கள் ஆதரித்தார்கள். ஜாதி, சமயம் என்ற பேதமின்றி, பிரபு, ஏழை என்ற ஏற்றத் தாழ்வின்றி இறைவனை வழிபடவும், மக்களிடையே நற்குணங்களையும், சகோதர மனப்பான்மையையும் உண்டாக்கவும் பிரம்ம சமாஜம் பாடுபட்டது.

அந்த நாட்களில் உடன்கட்டை ஏறுதல் என்னும் கொடிய வழக்கம் நாட்டில் பரவியிருந்தது. அதைத் தடுக்க ராம் மோஹனர் அரும்பாடு பட்டார். உடன் கட்டை ஏறுவோரைத் தடுத்தார். அவர்களுடைய உறவினருக்கு உபதேசஞ் செய்தார். உடன்கட்டை ஏறுதலைக் கண்டித்து வங்க மொழியில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இந்தியாவுக்குக் கவர்னராக அனுப்பப் பட்ட பென்டிங் பிரபுவைச் சந்தித்து, "உடன்கட்டை ஏறுவோரும், அதற்கு உடந்தையாக இருப்போரும் தண்டிக்கப் படுவார்கள்" என்ற ஒரு சட்டத்தை ஏற் படுத்தச் செய்தார்.

வைதிகர்கள் இதை எதிர்த்தார்கள். இதையிட்டுச் சக்கரவர்த்திக்கு மனுச் செய்தார்கள். இதற்காகவும், டில்லி பாதுஷாவின் தூதராகவும் ராம் மோஹனர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அவர் புறப்பட்ட போது டில்லி பாதுஷா அவருக்கு ராஜா என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்.

ராஜா ராம் மோஹன் ராய் இங்கிலாந்து சென்ற சமயம் அரசரின் பட்டாபிஷேக சமயமாக இருந்தமை

யால் இந்தியப் பிரதிநிதியாக அவரை வரவேற்று உபசரித்தார்கள். அவர் கருதிப் போன விஷயங்களில் வெற்றி பெற்ருர். உடன்கட்டை ஏறும் கொடிய வழக்கத்தை நீக்கி வைத்தார். வெற்றியுடன் தாய்நாடு திரும்பினுர்.

சீதோஷ்ண வேறுபாட்டால் அவர் நோய்வாய்ப் பட்டார். நண்பர்கள் மிகக் கவனமாகச் சிகிச்சை செய் வித்தார்கள். ஆனுலும் ராம் மோஹன் ராயின் நோய் அதிகரித்தது. 1833-ம் ஆண்டில் அவர் வாழ்வை நீத்தார்.

இஸ்லாமிய மதம்	**போலி**	**விக்கிரக ஆராதனே**
பாண்டித்தியம்	**ஜமீன்**	**உடந்தை**

வினுக்கள் :

1. ராம் மோஹனர் இளம் வயதிலே வீட்டை விட்டு வெளி யேறிய காரணம் என்ன ?
2. சங்கங்களே ஸ்தாபித்த ராம் மோஹனரின் முக்கிய நோக்கம் என்ன ?
3. அவர் நாட்டுக்கு நன்மையே செய்தபோதும், ஜனங்கள் அவரை வெறுத்த காரணம் என்ன ?

21. ஜோன் ஒவ் ஆர்க்

15-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் பிரான்ஸ் தேசத்திலே லொரையின் மாகாணத்திலுள்ள டொம்றிமி என்னும் கிராமத்தில் சாதாரணக் குடும்பத்திலே ஜோன் ஒவ் ஆர்க் பிறந்தாள். அவளது தகப்பன் ஒரு விவசாயி. சிறுவயதில் தங்கள் மந்தைகளே மேய்ப்பதே இவள் தொழிலாக இருந்தது.

அக்காலத்தில் லொரையின் பகுதி அமைதியாக இருந்தாலும் அதை அடுத்துள்ள மற்றெரு பகுதியில்

ஆங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் இடையே யுத்தம் நடந்து கொண்டே இருந்தது. நீண்ட சமாதானமற்ற சிறிய இடைக்கால எல்லைகளை உடையதாய் அந்த யுத்தம் நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. அந்த யுத்தத்தினுல் பிரான்ஸின்

வடபகுதி ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்குட்பட்டே இருந்தது. ஆங்கிலேயர் பிரான்ஸின் தென் பாகத்தை யும் வெற்றி கொள்ள எண்ணினுர்கள். ஆனுல் அதற்கு முன் ஓலியன்ஸ் என்னும் பெரிய நகரத்தை அவர்கள் கைப்பற்ற வேண்டி இருந்தது. அந்த நகரை 1428-ல்

ஆங்கிலேயர் முற்றுகை யிட்டார்கள். அதனுல் பிரான்ஸியர் துக்கத்தில் ஆழ்ந்தார்கள். அப்பொழுது பிரான்ஸின் இளவரசன் படைகளைக் கொண்டு நடத்த முடியாமலிருந்தான். இந்த நிலையில் வீரர்கள் ஒளியன்ஸைக் கைவிட எண்ணினுர்கள்.

அப்பொழுது தான் ஜோன் இந்தச் சம்பவங்களையும், பிரான்ஸிய மக்களின் துயர நிலைமைகளையும் பெற்ருேர் சுற்றத்தவர் மூலம் அறிந்து, மக்களுக்கு உதவி செய்யும் ஆவலோடு இருந்தாள். ஆயினும் அவளுடைய உதவியைப் பொருளாக மதிக்கவோ, வரவேற்கவோ யாரும் தயாராக இல்லை. இளங் கன்னியான அவளது உணர்ச்சிப் பெருக்குக்கு அவளது பெற்ருேரும், நண்பர்களுமே தடையாக இருந்தார்கள். கடைசியில் அவள் தன் சுற்றத்தவன் ஒருவனின் துணையோடு, ஒரு பிரபுவின் மூலம் அரச சபையை அடைந்தாள். அப்பொழுது அவளின் வயது பதினேழு தான்.

ஜோனின் வேண்டுகோளை இளவரசன் கேட்டு முடிவில் ஒளியன்ஸை முற்றுகையிட்ட ஆங்கிலேயரை எதிர்க்கும் பட்டாளம் ஒன்றுக்குத் தலைமை தாங்கி நடத்தும் அதிகாரத்தை அவளுக்குக் கொடுத்தான். பிரான்ஸிய யுத்த வீரர்கள் அவளைக் கண்டதும் மிக்க ஆர்வங் கொண்டனர். அதில் பெருமையும் கொண்டார்கள்.

ஒரு பெரும்படைக்குத் தலைமைதாங்கி ஒளியன்ஸை நோக்கி அவள் வருவதைக் கண்ட நகர மக்கள் "வீர மங்கை வருகிருள், வருகிருள்" என ஆரவாரஞ் செய்து தங்கள் ஆனந்தத்தைக் காட்டினுர்கள்.

ஜோன் தலைமை வகித்து யுத்தத்தை நடத்தியது பிரான்ஸிய வீரர்களுக்கு மிக்க ஊக்கத்தையும், மிஞ்சிய வீரத்தையும் கொடுத்தது. அது ஆங்கிலேய வீரர்

களுக்குப் பீதியையும், பயத்தையும் உண்டுபண்ணியதால் அவர்கள் முற்றுகையும் சிதறடிக்கப்பட்டது.

ஜோன் ஒளியன்ஸின் கன்னி எனக் கொண்டாடப் பட்டாள். யுத்தத்தின் பெருமிதத்தோடு அவள் இளவரசனைச் சந்தித்தாள். அப்பொழுது அவன் பிரான்ஸின் மானத்தைக் காத்த கன்னிக்குத் தலை வணங்கிக் கௌரவித்தான்.

றெயிம்ஸ் கதீட்ரல் என்னும் ஆலயத்தில் இளவரசனுக்கு முடிசூட்ட வேண்டும் என்பது ஜோனின் விருப்பம். அந்த ஆலயத்துக்குப் போவதற்கிடையில் அவள் அநேகம் தடவைகள் பகைவரைத் தோற்கடித்தாள். கடைசியில் இளவரசனுக்கு முடிசூட்டும்போது அவளும் பக்கத்தில் நின்றாள்.

பிறகு, தான் தன் வீட்டுக்குப் போக விரும்புவதாக அரசனிடம் கூறினாள். பிரான்ஸிய மக்கள் ஜோனிடம் உள்ள நம்பிக்கையால் அவளை எந்த வகையிலும் பின்பற்றுவார்கள் என்ற எண்ணத்தால் அரசன் அதற்கு இணங்கவில்லை.

ஜோனின் முடிவு மிகவும் துக்கம் நிறைந்ததாயிற்று. ஒருநாள் ஆங்கிலேயர் பக்கத்தில் நின்று போர் செய்த சில துரோகிகளான பிரான்ஸியர்களால் அவள் கைது செய்யப்பட்டு நாலாயிரம் பவுனுக்கு ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டாள்.

ஜோனுக்கு மிகவும் துக்ககரமான நாள் வந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயர் அவள் பைசாச வெறி பிடித்தவள் எனக் குற்றஞ் சாட்டி அநீதியாக நீண்ட விசாரணை நடத்தினார்கள். ஒளியன்ஸின் வெற்றிக்கு அடுத்த ஆண்டின் பிறகு வீர கன்னியான ஜோனை ஆங்கிலேயர் ஒரு சந்தை நடுவில் இழுத்துச் சென்று உயிருடன் எரித்து விட்டார்கள். அவள் மரண பய

மின்றி அதை வரவேற்ற கம்பீரமான காட்சியைக் கண்டு ஜனங்கள் அதிசயித்தார்கள். அப்பொழுது ஒரு ஆங்கிலேயன் நெட்டுயிர்த்துத் தன் வாயினுள் பின் வருமாறு சொல்லிக் கொண்டான்.

"ஒரு ஞானியான வீர கன்னியை எரித்ததால் நாங்கள் அழிந்தோம்."

அவளது பொன்னுடல் எரியும்போது நிறைந் திருந்த புகையினூடாக ஒரு பால் நிறப் புரு வானை நோக்கிப் பறந்ததாம். அந்தக் கன்னிக்கிழைத்த தாங்கொணாத குரூர சம்பவத்தை உலகுக்குச் சொல்லக் கடைசியில் ஒருபிடி சாம்பர் மிஞ்சிக் கிடந்தது.

அவள் இறந்து சிறிது காலத்துக்குள், அதாவது கி. பி. 1453-ம் ஆண்டுக்கு முன்னரே கலே என்னும் கடற்கரை நகரைத் தவிர மற்றெல்லா இடங்களையும் ஆங்கிலேயர் பிரான்ஸியருக்குப் பறிகொடுத்து, ஓடி விட்டார்கள்.

பீதி நெட்டுயிர்த்து

வினாக்கள் :

1. ஜோன் ஏன் யுத்தஞ் செய்ய விரும்பினாள் ?
2. ஜோனின் வீரம் எப்படியானது ?
3. உபகாரஞ் செய்த ஜோன் வீட்டுக்குப் போக இளவரசன் என் அநுமதிக்கவில்லை ?
4. ஜோனின் முடிவைப்பற்றிய உமது அபிப்பிராயம் என்ன ?

22. காப்பிப் பானம்

உலகம் முழுவதும் காப்பி ஒரு பானமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் அது ஒரு உணவல்ல. உடம்பைச் சுகப்படுத்தும் மூலிகையும் அல்ல. அது ஒரு மருந்து; நஞ்சு கலக்கப்பட்ட மருந்து. அருந்துபவர்

களுக்கு நோய்களைக் கொடுத்துத் தீமை விளைவிக்கும் காப்பியை நஞ்சு கலக்கப்பட்ட மருந்து என்று தான் சொல்லவேண்டும்.

காப்பிப் பானத்தைப் போலவே, தேயிலைப் பான மும், கொக்கோ முதலிய பானங்களும் தீமை விளைவிப் பவை. அவை செய்யும் தீமைகள் அநேகம். அந்தத் தீமைகளுக்கு ஆளாகும் மக்களின் தொகை அளவிட முடியாதது. ஆனால் அதை ஒருவரும் உணருவதில்லை. காப்பி என்ற பெயருடன் விஷத்தை அவர்கள் சந்தோ ஷத்துடன் குடிக்கிறார்கள். இதை நினைக்கும் போது வருத்தமாக இருக்கிறது.

காப்பிப் பானம் அருந்துவதால் தலைவலி, மனச் சோர்வு, தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி, பெலவீனம் போன்ற அநேக வியாதிகளை வரவழைத்துக் கொள்ளு கிறோம். உற்சாகம் ஊட்டும் சிறந்த பானம் என்று புகழப் பட்ட காப்பிப் பானத்தை விஷபானம் என்று விஞ்ஞா னம் நிரூபித்து விட்டது. ஆனால் அதை எத்தனை பேர் உணர்ந்து நடக்கிறார்கள்? ஒருவருமே இல்லை.

காப்பியில் இருக்கும் விஷம் அருந்துவோருடைய உடம்பு முழுவதும் செறிந்து விடும். அந்த விஷம் சில சமயங்களில் மயக்கத்தைக் கொடுக்கும். மயக்கம் உண் டாகும் பொழுது காப்பி குடித்தால் தெளிந்து விடும் என்று நினைக்கிறோம். குடிக்கும் காப்பிப் பானமும் மயக்கத்தைக் கொடுப்பதே என்பதை எண்ணுகிறோமா?

சில வருஷங்களாக இருதய சம்பந்தமான நோய் கள், ரத்தக் கொதிப்பு முதலியவற்றால் ஏற்படும் மரண விகிதம் கூடிக்கொண்டே போகிறது. இதற்குக் காரணம் காப்பி குடிக்கும் கெட்ட பழக்கமே என்று அநேக வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். காப்பியினால்

இருதயம் பெலவீனமடைந்து விடுகிறது என்று அவர்கள் ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள்.

சேர் உவில்லியம் ரொபேர்ட்ஸ் என்னும் நிபுணர் தனது ஆராய்ச்சிகளின் மூலம் உணவை ஜீரணிக்க உதவும் உமிழ் நீரின் தன்மைகளைக் காப்பி குறைத்து விடுகிறது என்று நிரூபித்தார். அதனால் ஜீரண சக்தியும் தடைப் படுத்தப்படுகிறது என்று தெரிகிறது.

உணவு முறைகளைப் பற்றி எழுதுவதில் சிறந்தவரான டொக்டர் டிப்பிள்ஸ் என்னும் ஆங்கிலேயர் காப்பி ஈரலை மிகவும் பாதிக்கிறது என்று கூறுகிறார். அத்துடன் தூக்கமின்மை, இருதயத் துடிப்பில் வித்தியாசம், நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களுக்கு மூல காரணம் காப்பி தான் என்று கூறுகிறார்.

காப்பியில் ஒருவகை விஷம் இருக்கிறது. அது தான் உடம்பிலே செறிந்து தீமையை விளைவிக்கிறது. ஆனால் அதே விஷம் ஒரு விதத்தில் மிகவும் உபயோகமானது. சத்திர சிகிச்சை செய்யப் பட்டதால் ரத்த அமுக்கத்தில் ஏற்படும் மந்தத்தை நீக்க அந்த விஷம் உபயோகப்படுகிறது. அதில் ஒரு சிறிதளவு கொடுத்ததும் ரத்த அமுக்கம் சராசரி நிலையை அடைந்து விடுகிறது.

காப்பி ஒரு மருந்து பொருள். அதில் மருந்தாக உதவும் விஷம், காப்பியை வழக்கமாக அருந்தினால் வியாதியைக் கொடுக்கும் விஷமாக மாறிவிடுகிறது.

மயக்கந் தரும் மஸ்துப் பொருள்களிலும் பார்க்கக் காப்பியினால் அதிக தீமைகள் விளைகின்றன. மஸ்துப் பொருள்களை உபயோகித்துப் பழகியவன் அவற்றை விட்டு ஒருபோதும் இருக்க மாட்டான். அதுபோலவே காப்பி குடிக்க ஆரம்பித்த ஒருவனும் அதற்கு அடிமையாகித் தனது சக்தியை இழந்து மடிகிறான்.

காப்பி, தேயிலை, கொக்கோ முதலிய பானங்களை மக்கள் விடாத வரையில் அவர்களுடைய சுகவாழ்வும் அழிந்தே போகும். உண்மையான நிலை இப்படியிருக்க வியாபாரிகள் என்ன சொல்லுகிறார்கள்? "சுகத்துக்குக் காப்பி குடி; தேநீர் பருகு: கொக்கோ அருந்து" என்றெல்லாம் பிரமாதமாக விளம்பரப் படுத்துகிறார்கள்.

இவற்றிற்குப் பதிலாகப் பழரசங்களையும், பாலையும் உபயோகிக்கலாம். அழிவு தரும் காப்பி முதலியன எங்களது உணவில் முக்கியமான ஒரு பாகமாக ஆகி விட்டதைப் பார்த்து ஆச்சரியந்தான் உண்டாகிறது.

மரண விகிதம்	**பாதிக்கிறது**	**சத்திர சிகிச்சை**
ரத்த அமுக்கம்	**மந்தம்**	**மஸ்து**

வினாக்கள் :

1. காப்பிப் பானத்தால் ஏற்படும் தீமைகள் எவை?
2. காப்பி எவ்விதம் மருந்தாக உதவுகிறது?
3. காப்பிப் பானத்துக்கும் பாலுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

23. மன்னாதி மன்னன்

கல்யாண் துர்க்கத்திலிருந்து அதை அடுத்த ஒரு சிறிய பிரதேசத்தை முகமதிய சிற்றரசன் ஒருவன் ஆண்டான். விரிந்து கொண்டிருந்த ஹிந்து சாம்ராஜ்யத்துக்கு அது ஒரு குறையாகவே சிவாஜி மன்னனுக்குப் பட்டது. அதனால் அதைத் தங்கள் ராஜ்யத்தின் கீழ் கொண்டுவர ஒரு படையை ஏவினார்.

அவரது ஆசை சீக்கிரத்தில் நிறைவேறிற்று. அந்த முகமதிய அரசன் தன் சக்தி முழுவதையும் பிரயோகித்தான். கடைசியில் சக்தியற்று விழுந்து இறந்தான்.

சிவாஜியின் சேனுவீரர்கள் கோட்டைக்குள் பிரவே சித்தார்கள். முகமதிய அரசனுடைய பொக்கிஷச் சாலே, ஆயுதசாலே எல்லாவற்றையும் பார்வையிட்

டார்கள். அந்தப்புரத்திலே அந்த அரசனது மகளேயும் கண்டார்கள். அவளே அழைத்துக் கொண்டுவந்து சிவாஜியின் முன் நிறுத்தினர்கள்.

சிவாஜி நிமிர்ந்து பார்த்தார். செளந்தர்ய தேவதை போல ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். சிவாஜியைக் கம்பீரமாக நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் துக்கமும் பரிகாசமும் கலந்திருப்பதாகவே சிவாஜி எண்ணினுர். ஏதோ குற்றம் செய்துவிட்டவர் போல சிவாஜி பயப்பட்டார்.

"அம்மா! உனக்கு எது வேண்டுமாஞலும் கேள். தர ஆயத்தமாக இருக்கிறேன்" என்று சிவாஜி கூறினுர். அப்போது ஒளிபொருந்திய அவரது கண்கள் கலங்கியிருந்தன.

அவள், "எனக்கு ஒன்றுமே வேண்டாம். என்னை உங்கள் ராஜ்ய எல்லைக்கு வெளியே பாதுகாவலுடன் அனுப்பி வைத்தால் போதும்" என்ருள்.

"எது வேண்டுமாஞலும் செய்யக் காத்திருக்கிறேன்" என்று சிவாஜி மிகுந்த ஆதரவுடன் கூறினுர். அன்றைக்கு அவள் தங்கியிருப்பதற்குச் சகல செளகரியங்களும் செய்து கொடுத்தார்.

மறுநாள், தான் போகவேண்டும் என்று அவள் சொல்லி அனுப்பினுள். சிவாஜி ஒரு பல்லக்கு அனுப்பி, தகுந்த காவலாக ஒரு குதிரை வீரனை அனுப்புவதாகவும் சொன்னுர்.

பல்லக்கு சிவாஜியின் ராஜ்யத்தைக் கடந்து சென்றுகொண்டிருந்தது. பின்னுல் வந்துகொண்டிருந்த குதிரை வீரன் இமைகொட்டாது எல்லாத் திசைகளையும் பார்த்துக்கொண்டே சென்ருன். மேலும் பல்லக்குப் போய்க்கொண்டே இருந்தது. பல்லக்கின் உள்ளே திரை மறைவில் அந்த முகம்மதிய ராஜ கன்னி இருந்தாள்.

சிவாஜியின் ராஜ்ய எல்லையைக் கடந்து பல்லக்கு அவரது பகைவரின் ராஜ்யத்துள்ளும் அதிக தூரம்

போய்விட்டது. காவலாக வந்த குதிரை வீரனுக்கு அப்பொழுதுதான் சந்தோஷம் உண்டாயிற்று.

"அம்மா! நீ விரும்பியபடி சிவாஜியின் ராஜ்ய எல்லையைக் கடந்து வெகுதூரம் வந்துவிட்டாய். இனி நான் போகலாமா?" என்று அவன் கேட்டான்.

கடமையை நிறைவேற்றிய கர்வத்துடன் அவன் அப்படிக் கேட்டான். பல்லக்கினுள் இருந்த பெண் ஆச்சரியப்பட்டாள். இவ்வளவு கம்பீரமாக யார் பேச முடியும் என்று நினைத்தாள். திரையை நீக்கி விட்டுக் குதிரை வீரனைப் பார்த்தாள்.

ஒளி வீசும் கண்கள்; நீண்டு வளைந்து கம்பீரமாக நிற்கும் மூக்கு; வீரம் தொனிக்கும் முகம். எல்லாம் அவளைத் திகைக்க வைத்துவிட்டன. குதிரையின் மேல் சிவாஜி சந்தோஷத்துடன் இருந்தார். அவள் உடனே பல்லக்கை விட்டிறங்கினாள். சிவாஜியின் அருகில் ஓடி வந்து "மகாராஜ்! கேவலம் ஒரு எதிரியின் பெண்ணுக்குக் காவலாக, ஜன்ம விரோதிகளின் ராஜ்யத்தினுள்ளேயும் அதிக தூரம் வந்துவிட்டீர்களே! இந்த ஏழைக்குக் காவலாகத் தாங்கள்தானா வரவேண்டும்? தங்கள் வீரரில் ஒருவனை அனுப்பியிருக்கலாமே" என்று வணங்கினாள்.

"அம்மா! அது எனது கடமை. எனது கடமையைச் செய்ய வேறொருவரால் எப்படி முடியும்? வேறொருவர் உனக்குக் காவலாக வந்திருந்தால் எனக்குத் திருப்தியே ஏற்பட்டிராது. எனது கடமையை நான் செய்தால்தான் எனக்குத் திருப்தி ஏற்படும். கடமையை உணர்ந்து நடந்தால் கர்வம், உயிர் என்பன துரும்பு போலத்தான் தோற்றும்" என்றார் சிவாஜி.

அவரது கண்கள் ஒளிவீசிப் பிரகாசித்தன. அவள் அவரை மறுபடியும் வணங்கினாள். அவளது கண்களி

லிருந்து கண்ணீர்கூட ஓடியது. சிவாஜி புன்னகை செய்து அவளை வாழ்த்தி வழியனுப்பினார்.

சௌந்தர்ய தேவதை சௌகரியங்கள்

வினாக்கள் :

1. சிவாஜி தன் எதிரியின் மகளை மரியாதையாக நடத்தினார். அதிலிருந்து சிவாஜியைப் பற்றி நாம் என்ன எண்ணுகிறோம் ?

2. அந்தப் பெண், குதிரை வீரனாக வந்த சிவாஜியை எதற்காக வணங்கினாள் ?

3. சிவாஜி தன் கடமையை எவ்விதம் கருதினார் ?

24. விஞ்ஞானிகள்

முடிவற்றுப் பரந்து கிடக்கும் வெளி உலகத்தைப் போலவே ஒவ்வொரு மனிதனுள்ளும் மற்றோர் உலகம் இருக்கிறது. அந்த உலகத்தையிட்ட ஆராய்ச்சிகளில் நமது முன்னோர்கள் ஈடுபட்டார்கள். அநேகர் இவ்வித ஆராய்ச்சிகளில் வாழ்நாள் முழுவதையும் கழித்தார்கள். ஆயினும் சிலரே அதில் சித்தி பெற்றனர். அவர்கள் தாம் ஞானிகள் ; உண்மையைக் கண்டவர்கள்.

மேலைத் தேசத்தவர்கள் வெளியுலக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்கள். நக்ஷத்திரங்கள், கிரகங்கள் என்பவற்றின் தன்மைகளையும், ஒளி, ஒலி, மின்சாரம், காந்தம் என்பவற்றின் தன்மைகளையும் ஆராய்ந்தார்கள். பொருள்களின் அமைப்பையிட்ட ஆராய்ச்சிகளில் அநேக வருஷங்களைக் கழித்தார்கள். வைத்தியம், கணிதம் என்ற சாஸ்திரங்களுக்கு உலகத்தில் உள்ள தொடர்பு என்ன என்று ஆராய்ந்தார்கள்.

அவர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகள் எண்ணிறந்தவை. இன்னும் ஆராய்ந்து கொண்டே இருக்கிறார்கள். தமது உயிரைத் திருணமாக மதித்து

இந்த ஆராய்ச்சிகளைச் செய்பவர்களே விஞ்ஞானிகள்; வெளியுலகத்தையிட்ட உண்மையைக் காணுபவர்கள்.

ஆத்ம ஞானிகளைப் போலவே விஞ்ஞானிகளும் விடாமுயற்சி உடையவர்கள். தோல்வியைக் கண்டு மனமுடைந்து போகாமல் மேலும் மேலும் ஆராய்பவர்கள். தம் உயிரைப் பொருளாக மதியாதவர்கள். உலகத்தின் சகல செளகரியங்களுக்கும் அடிகோலிவிடும் சுயநலமற்ற உத்தமர்கள்.

பெளதிகம், ரஸாயனம் என்ற இரண்டு துறைகளிலும் மைக்கேல் பாரடே என்ற ஆங்கில விஞ்ஞானி அளவற்ற சேவை செய்திருக்கிறார். அவர் ஏழைக் குடும்பத்திலே பிறந்தார். பள்ளிக்கூடத்தில் படிக்கவே இல்லை. சிறு வயதிலேயே புத்தகம் கட்டும் கடை ஒன்றில் வேலையாளாகச் சேர்ந்தார். அங்கே கட்டுவதற்காக வரும் புத்தகங்களை அவர் புரட்டிப் பார்ப்பார். அதன் பயனாக விஞ்ஞானத் துறையில் சோதனைகள் நடத்த வேண்டும் என்ற அவா அவருக்கு உண்டாயிற்று. ஏழைப் பையன் ஒருவனுக்கு அது முடியுமா?

ஆனாலும் அவரது ஊக்கம் குறையவில்லை. அக்காலத்தில் இங்கிலாந்தில் சேர் ஹம்ப்ரி டேவி என்ற பிரசித்தி பெற்ற விஞ்ஞானி ஒருவர் இருந்தார். அவர் செய்த விஞ்ஞானப் பிரசங்கங்களைக் கேட்டு பாரடே குறிப்புகள் எடுத்துக்கொண்டார். அவற்றுடன் டேவியிடம் சென்று தன் எண்ணத்தை வெளியிட்டார். டேவியும் மகிழ்ந்து அவரைத் தன் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலையில் உதவியாளாக வைத்துக் கொண்டார். உதவியாளனாக நியமிக்கப்பட்ட பாரடே ஆராய்ச்சிகள் செய்து பல உண்மைகளை வெளியிட்டார்.

மின்சாரத்தினுல் உலகம் அடைந்த பலன் அளவிட முடியாதது. மின்சாரத்தையிட்டு இவர் செய்த ஆராய்ச்சிகளே மின்சாரம் இவ்வளவு தூரம் விருத்தி யடையக் காரணமாய் இருந்தன. இவர் கண்டு பிடித்த மின்சாரமியற்றும் கருவியே உலகம் முழுவதும் உபயோகிக்கப் படுகிறது. அவர் அந்தக் கருவியை விற்றுப் பெரும் பொருள் சம்பாதித்திருக்கலாம். ஆனல் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏழையாகவே இருந்தார்.

இந்திய விஞ்ஞானி சேர் ஸி. வி. ராமனும் உலகப் பிரசித்தமானவர். இளம் வயதில் கலாசாலையில் படித்து உயர்தரப் பட்டங்கள் பெற்றவர். விஞ்ஞானத்துக்காக உழைக்க வேண்டும் என்ற அவாவினுல் பெரிய உத்தி யோகத்தையும் உதறித் தள்ளினுர். ஆராய்ச்சிகளின் பயனுக ராமன் கண்டறிந்த முடிவுகளைக் கேட்டு உலகமே ஆச்சரியப் பட்டது. இந்தியாவில் ஆத்மஞானிகள் மட்டுமல்ல, விஞ்ஞானிகளும் இருக்கிருர்கள் என்பதை உலகம் ஒப்புக்கொண்டது.

தம் உயிரைத் திருணமாக மதித்து விஞ்ஞானிகள் பலர் செய்த ஆராய்ச்சிகளின் பயனுக உலகத்துக்கு அளவற்ற நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. வாழ்க்கை முறையிலே பெரிய மாறுதல்களைச் செய்துள்ள மின்சாரம், யந்திரங்கள், தந்தி, ரேடியோ, விமானம் என்பனவும், தீராத நோய்களைக் குணப்படுத்தும் சக்தி யுள்ள ஒளிக்கிரணங்கள், எலும்பு முறிவைக் கண்டு பிடிக்கும் எக்ஸ் கிரணங்கள் என்பனவும் விஞ்ஞானி களின் விடாமுயற்சியினுலும், சுயநலமற்ற தன்மை யினுலும் ஏற்பட்டவை. விஞ்ஞானிகளையும் ஆத்ம ஞானிகளையும் ஒரு ஸ்தானத்தில் வைத்தே நாம் பார்க்க வேண்டும். அவர்களை நாம் வணங்கவேண்டும்.

ஆத்மஞானிகள்	**விஞ்ஞானிகள்**
பௌதிகம்	**ரஸாயனம்**

வினாக்கள் :

1. விஞ்ஞானம் என்றால் என்ன ?
2. விஞ்ஞானிகளை நாம் ஏன் போற்ற வேண்டும்.
3. விஞ்ஞானத்தால் நமக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன ?
4. நீர் அறிந்த விஞ்ஞானிகளையும் அவர்கள் செய்தவற்றையும் பற்றிக் கூறுக.

25. வாழ்க்கை

புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையஞ் சோலையிலே
மலர்ந்து நல்ல மணம்வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்
உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிருமவையும் ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வை இதில்
கண்ணாற் கண்டு தெளிவாயே. 1.

பாரி போலக் கொடுத்தவரும்
பணத்தைப் புதைத்து வைத்தவரும்
தேரின் மண்ணாய்ப் போனதலால்
செம்பொன்னானதறியோமே
ஊரில் அவர்தம் உடலையெடுத்(து)
உரையும் திரையும் காணாரே ;
ஓரும் உள்ளத் துண்மையிதை
ஊன்றி நோக்கி உணர்வாயே. 2.

வையம் பழைய அரண்மனையாம்
வாயில் இரவு பகலேயாம்
மெய்யின் இங்குக் கொலுவிருந்து
விதித்த காலம் அரசாண்டு
செய்ய மணிமா முடிவீழச்
சென்ற மன்னர் எண்ணிலரால்;
ஐய! இதனை உள்ளத்தில்
ஆழ்ந்து காணல் அறிவாமே. 3.

கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழும் காடாமே
வெற்றி வில்லை ஏந்தி முனம்
வேட்டை செய்த வேடன்கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
பாரில் கண்ணுற் பார்ப்போமே. 4.

[உமார்காயம் பாடல்கள்]

தேசிக விநாயகம் பிள்ளை.

26. கோபால கிருஷ்ண கோகலே

கோபால கிருஷ்ண கோகலே பம்பாயிலுள்ள கோலாப்பூரில் 1866-ம் ஆண்டு பிறந்தார். கோலாப்பூரிலே ஆரம்பக் கல்வி கற்ற பின் பம்பாயிலுள்ள எல்பின்ஸ்றற்றன் கல்லூரியில் சேர்ந்து பீ. ஏ. பரீக்ஷையில் சித்தியடைந்தார்.

கோகலேயின் மனத்தில் தேசபக்தி வளர ஆரம்பித்தது. அவர் மேலே படிக்க விரும்பவில்லை. தேச சேவை தனது கடமை என உணர்ந்தார்.

" தேசத்தின் எதிர்கால நிலைமை இப்பொழுதுள்ள சிறுவர்களின் கையில்தான் இருக்கிறது. அவர்கள்

வீரர்களாகவும், உண்மை ஊழியர்களாகவும் வளர வேண்டும். அவர்களை அவ்விதம் வளர்க்கும் தொண்டை மேற்கொள்ள வேண்டும் " என்று கோகலே எண்ணிக் கொண்டு ஆசிரியரானார். ஆசிரியராக இருப்பதில் உள்ள கஷ்டங்களை அவர் பொருட்படுத்தவில்லை.

அந்தச் சமயத்தில் தெற்குக் கல்விச் சங்கம் செய்த சிறந்த சேவைகளைப் பார்த்து, தானும் அதில் ஓர்

அங்கத்தவர் ஆனார், மிகவும் குறைந்த சம்பளம் பெற்று, பர்கூஸன் கலாசாலையில் தலைமை ஆசிரியராகக் கோகலே தன் கடமையைச் செய்தார்.

எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பது கோகலேயின் கொள்கை. உண்மை என்று கண்டவற்றையே செய்யவேண்டும் என்று மாணவர்களுக்கு உபதேசித்தார். ஒரு நிமிஷ நேரத்தையும் வீணுக்காமல் மாணவர்களின் அறிவையும், வீரத்தையும் பெருக்கினார். பத்திரிகைகளில் எழுதவோ, பொதுக் கூட்டங்களில் பேசவோ கோகலே எண்ணவில்லை.

கோகலேயின் தியாக வாழ்வைக் கண்டு ஜனங்கள் அவரைப் போற்றினார்கள். பம்பாய் மாகாண அரசினரின் வேண்டுகோளுக்கு இணங்கி நான்கு வருட காலம் மாகாணக் காரியதரிசியாகக் கடமை பார்த்தார். 1895-ம் ஆண்டில் பூனாவில் கூடிய காங்கிரஸ் மகா நாட்டிற்குக் காரியதரிசியானார். கருமங்களை எல்லாம் முறைப்படி செய்து முடித்தார். அவரது திறமையையும் தியாகத்தையும் கண்டு 'தக்ஷிண உதய தாரகை' என்று எல்லோரும் அவரை அழைத்தார்கள்.

1897-ம் ஆண்டில் இந்தியாவின் வரவு செலவுக் கணக்கை ஆராய்வதற்காக இங்கிலாந்தில் வெல்பி கொமிஷனை ஏற்படுத்தினார்கள். இந்திய மக்கள் கோகலேயைத் தெரிந்தெடுத்துத் தமது பிரதிநிதியாக அனுப்பினார்கள். கோகலே இங்கிலாந்து சென்று வாக்கு மூலம் கொடுத்தார். இந்தியாவின் தேவைகளைப் பல பிரசங்கங்கள் மூலம் ஆங்கிலேயரது மனத்திலே படும்படி செய்தார்.

திரும்பி வந்தபோது பம்பாய் சட்ட நிரூபண சபைக்கு அங்கத்தினராகக் கோகலேயைத் தெரிந்தெடுத்

தார்கள். 1902-ம் ஆண்டில் பர்கூஸன் கலாசாலைத் தலைமைப் பதவியிலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றார். அக்காலத்தில் இந்திய ராஜப்பிரதிநிதியின் சட்ட நிரூபண சபை அங்கத்தவரில் ஒருவர் வியாதி காரணமாக ஓய்வெடுத்துக் கொண்டார். அந்தப் பதவியை வகிப்பதற்குக் கோகலே தெரிந்தெடுக்கப் பட்டார்.

சட்ட நிரூபண சபையிலிருந்து இந்தியர்களுக்கு அவர் எத்தனையோ நன்மைகளைச் செய்தார். அவரது பேச்சு வன்மையைக் கண்டு ராஜப்பிரதிநிதியான கர்ஸன் பிரபு அவரைப் புகழ்ந்தார். அவரைக் கௌரவிக்கும் நோக்கத்தோடு கௌரவப் பட்டம் ஒன்றை வழங்கினர். பெருமையை விரும்பாத கோகலே பட்டத்தை ஏற்க மறுத்து விட்டார்.

1905-ம் ஆண்டில் இந்தியாவின் அரசியல் நிலைமைகளையும், ஆங்கில அதிகாரிகளின் அக்கிரமத்தையும் எடுத்துச் சொல்வதற்காகக் கோகலேயை இங்கிலாந்துக்கு இந்திய மக்கள் அனுப்பினர்கள். அவர் ஐம்பதுக்கு மேற்பட்ட பிரசங்கங்கள் செய்து, கேட்ட ஒவ்வொருவனுடைய மனத்திலும் இந்தியாவின் உண்மை நிலை தெரியும்படி செய்தார்.

தாய் நாடு திரும்பிவந்த கோகலே காசியில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். மறுபடியும் இந்திய மந்திரியைக் கண்டு பேசுவதற்காக இங்கிலாந்து சென்றார்.

கோகலே, இந்திய சேவா சங்கம் என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். அதன் மூலம் இந்தியர்கள் நன்மை பெறுவதற்கான ஒழுங்குகள் செய்து வைத்தார். பெண் கல்வி, ஹரிஜன முன்னேற்றம், தொழிற் கல்வி

என்பன விருத்தி அடைவதற்காக மூலதனங்களையும், பாடசாலைகளையும் ஏற்படுத்தினர்.

ஆசார சீர்திருத்தங்களையும் போதிய அளவு கோகலே போதித்தார். விதவா விவாகம், கடல் பிரயாணம் என்பவற்றை ஆதரித்தார். பாரத நாட்டுக்குத் தனது தியாக சித்தத்தினாலும், சேவையினாலும் தொண்டாற்றினர்.

துரதிர்ஷ்டவசமாகப் பாரதத் தாய் 1917-ம் ஆண்டு தன் தவப்புதல்வனை கோகலேயை இழந்து விட்டாள்.

வாக்குமூலம் ராஜப்பிரதிநிதி
விதவாவிவாகம் மூலதனம்

வினாக்கள் :

1. கோகலே ஆசிரியரான காரணம் என்ன ?
2. கோகலே தேசமுன்னேற்றம் சம்பந்தமாகக் கொண்டிருந்த அபிப்பிராயம் என்ன ?
3. கோகலேயின் சேவையினால் இந்தியா பெற்ற நன்மைகள் எவை ?

27. நாடுதேடிய வீரர்கள்

கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனியர் வானளாவ உயர்ந்து நின்ற தங்கள் நகரச் சுவர்களின் மீது ஏறி, தங்கள் உலகத்துக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள்.

பிரித்தானியர் நாடு தேடும் வேலையில் ஈடுபடுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் மத்தியதரைக் கடற் பிரதேசத்தை மற்றவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். அப்பிரதேசத்தை ஆராய்ந்து தேசப் படம் வரைந்தார்கள்.

இதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் பிரித்தானியர் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அவர்களே நாடுதேடும் வேலையில் அதிக ஊக்கம் காட்டி வெற்றி பெற்றவர்கள். சீனர்கள் கண்டுபிடித்த நாவாய்க்கல் என்னும் திசையறிகருவி அவர்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தது. கப்பலோட்டி, நாடுகளைக் கண்டுபிடிக்க அவர்கள் மிகுந்த அவாக் கொண்டார்கள்

பனி மூடிக்கிடந்த அந்தப் பிரித்தானியத் தீவுகளில் உற்சாகம் பிறந்தது. கடலில் செல்லப் பயந்தவர்கள் எல்லாம் கடற்பிரயாணஞ் செய்தார்கள். பிரித்தானியத் துறைமுகங்களில் இருந்து நாள்தோறும் சிறு சிறு கப்பல்கள் புறப்பட்டன. புறப்பட்டுச் சென்ற கப்பல்கள் திரும்பியும் வந்தன.

திரும்பி வந்த கப்பல்களில் பிரித்தானியர் அதுவரை கண்டறியாத பட்டாடைகளும், பொன்னும், வாசனைத் திரவியங்களும் வந்து சேர்ந்தன. மாலுமிகளில் பலர் கடலில் இறந்து போனார்கள். ஆனாலும் மற்றவர்கள் கொண்டுவந்த பொருள்களைக் கண்டு பிரித்தானியர் மகிழ்ந்தார்கள். நாடு தேடும் வேலையில் மேலும் மேலும் உற்சாகங் கொண்டார்கள்.

எலிசபெத் மகாராணி காலத்திலே நாடுதேடிக் கடலில் சென்ற வீரர்களில் பிரான்ஸிஸ் ட்ரேக் என்பவன் பிரசித்தமானவன். தைரியத்துடன் கடல்மேல் சென்று திரிந்தால் எப்படியாவது ஒரு நாடு தோன்றும் என்று அந்த நாட்களில் மாலுமிகள் எண்ணினார்கள். ஆனால் ட்ரேக் அப்படி எண்ணவில்லை. பனமா ஜல சந்தியில் உயர்ந்து நின்ற மரத்தின் உச்சியில் ஏறி நின்று, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ட்ரேக் பார்த்தான். அக்கடலில் சென்று பார்க்கவேண்டும் என்ற துணிவோடு இங்கிலாந்துக்குத் திரும்பினான்.

கடல்மேல் சென்று நாடு தேடுவதால் இங்கிலாந்துக்குப் புகழ் ஏற்படும் என்று ட்ரேக் எலிசபெத் மகாராணிக்குச் சொன்னான். அவளது சம்மதத்தையும், உதவியையும் பெற்று, ஐந்து சிறிய மரக்கலங்களுடன் பிரயாணமானான். ஐந்திலும் பிரயாணஞ்செய்யப் புறப்பட்டவர்கள் அறுபத்தாறு பேர். 1557-ம் ஆண்டுக் கடைசியில் ட்ரேக் தன் கோஷ்டியுடன் பிரயாணத்தை ஆரம்பித்தான்.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் நான்கு மாதகாலம் பிரயாணஞ் செய்தபின் பிரேசில் கரையை வந்தடைந்தார்கள். வழியில் நான்கு கப்பல்கள் நாசமாய் விட்டன. மனிதர்களும் இறந்தார்கள். ட்ரேக்கின் கப்பல் ஒன்று தான் எஞ்சி நின்றது. சுமார் மூன்று வருஷகாலம் எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைந்த பிறகு ட்ரேக் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தான். எலிசபெத் மகாராணி அவனுக்கு 'நைற்' என்ற பட்டமளித்தாள். அவன் திரும்பிவந்த கப்பலை ஒரு ஞாபகசின்னமாக வைத்திருக்கும்படி கட்டளை இட்டாள்.

அப்போது பிரித்தானியரிடையே நாடுதேட வரப் பல வீரர்கள் புறப்பட்டார்கள். எத்தனையோ வீரர்கள் கடலுக்குப் பலியானார்கள். எத்தனையோ பேர் உணவின்றி இறந்தார்கள். எத்தனையோ பேர் அலைந்து திரிந்து வெற்றியுடன் திரும்பினார்கள். அந்தக் காலத்திலே ஜேம்ஸ் குக் என்பவன் மூன்று தடவை பிரயாணஞ் செய்து உலகம் முழுவதையும் சுற்றி வந்தான். பசிபிக் சமுத்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்த முதல் மனிதன் இவனே. அவுஸ்திரேலியாவிலும், நியூசீலாந்திலும் பிரித்தானிய ஆட்சி பரவச் செய்தவனும் இவனே.

நாடுதேடிய வீரர்களுள் டேவிட் லிவிங்ஸ்ற்றன் என்பவனே மிகவும் பிரசித்தமானவன். இருபது வருஷங்களாக அவன் கண்டுபிடித்த பிரதேசங்கள் எண்ணிறந்தவை. சென்ற இடங்களில் பலபல விதமான மனிதரைக் கண்டான். அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தான். மத்திய ஆப்பிரிக்காவில் அவனுடன் தொடர்பு பெற்றவர்களின் சந்ததியார் இன்றும் அவனை வாழ்த்துகிறார்கள்.

துருவ ஆராய்ச்சியில் இணையற்ற புகழ் பெற்றவன் கப்ரின் ஸ்கொட் என்பவன். 1911-ம் ஆண்டு தம் சகாக்களுடன் அவன் எமனுக்குப் பலியானான். தென் துருவத்திலிருந்து தமது விடுதிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, வழியிலேதான் ஆபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்தான்.

இப்பொழுது ஏற்பட்ட யுத்தத்துக்கு முன் தென் துருவபிரதேசத்தை ஆராய ஒரு கோஷ்டியினர் சென்றார்கள். அங்கு இரண்டு வருஷகாலம் தங்கியிருந்து ஒரு ஜலசந்தியைக் கண்டுபிடித்தார்கள். அதற்கு ஆறாவது ஜோர்ஜ் மன்னர் ஜலசந்தி என்று பெயரிட்டார்கள். அவர்களது ஆராய்ச்சிகள் முடியுமுன்னரே யுத்தம் ஆரம்பித்து விட்டது. அதனால் அவர்கள் தம் நாடு திரும்பி விட்டார்கள்.

தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் நாடுதேடும் வேலையில் ஈடுபடும் வீரர்களால் உலகத்துக்கு மிகுந்த பிரயோஜனம் ஏற்படுகிறது.

நாவாய்க்கல் ஜலசந்தி துருவ ஆராய்ச்சி

வினாக்கள் :

1. நாடுதேடிய வீரர்களால் உலகம் அடைந்த பலாபலன்களை ஆராய்க.

2. நாடுதேடும் முயற்சியில் ஈடுபட்டவர்களின் முக்கிய நோக்கம் என்ன?

3. நீர் அறிந்த சில நாடுதேடிய வீரர்களைப் பற்றிச் சொல்லுக.

28. ஒரு படி மாவு

பாரத யுத்தம் முடிந்த பின்பு தருமராஜன் ஒரு பெரிய அஸ்வமேதயாகம் செய்தான். பாரதநாட்டு மன்னர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். ஏராளமான பிராமணர்களுக்குத் தானங்கள் நிறைய வழங்கப் பட்டன. ஏழைகளும், அநாதைகளும் தானம் பெற்றுத் தருமனை வாழ்த்தினர்கள். யாகம் ஒரு குறையுமில்லாத படி சிறந்த முறையில் செய்யப்பட்டது.

அந்தச் சமயத்தில் யாகசாலைக்குள் ஒரு கீரிப்பிள்ளை திடீரென்று பிரவேசித்து, எல்லாரையும் பார்த்து ஏளன மாகச் சிரித்தது. மனிதரைப் போல் சிரிக்கும் ஒரு பிராணியைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். யாகத்தைக் கெடுக்கவந்த பேயாக, அல்லது பிசாசாக இருக்கலாம் என்று எல்லோரும் பயந்தார்கள்.

அந்தக் கீரிப்பிள்ளையின் உடம்பின் ஒருபக்கம் பொன்மயமாக விளங்கியது. அங்கே கூடியிருந்த அரசர்களையும், கல்வியில் வல்ல பிராமணர்களையும் பார்த்து அக்கீரிப்பிள்ளை பேச ஆரம்பித்தது.

"அரசர்களே! யாகத்தைச் சிறப்பாக நடத்தி விட்டதாக எண்ணி நீங்கள் பெருமைப் படுகிறீர்கள். ஆனல் நீங்கள் செய்த அஸ்வமேதயாகமும் அதில் செய்யப்பட்ட தானங்களும் சேர்ந்து, ஒரு காலத்தில் குருக்ஷேத்திரத்தில் வசித்துவந்த ஏழைப் பிராமணர் ஒருவர் தானமாகக் கொடுத்த ஒரு படி மாவுக்குச் சமமாக மாட்டா. நீங்கள் வீணிலே பெருமைப் படுவதில் என்ன பிரயோஜனம்?" என்றது.

இதைக் கேட்ட சபையோர் வியப்படைந்தார்கள். அவர்கள் விசித்திரமான அந்தக் கீரியைப் பார்த்து, "நீ யாரப்பா? சாஸ்திர முறைப்படி செய்யப்பட்ட இந்த யாகத்தையும் எங்களையும் இழிவுபடுத்தி ஏன் சொல்லுகிறாய்?" என்று கேட்டார்கள்.

கீரி சிரித்துக்கொண்டே மறுபடியும் சொல்லத் தொடங்கியது.

"பிராமணர்களே! நான் உண்மையைத்தான் சொன்னேன். எனக்கு உங்கள் மீது அல்லது தரும ராஜன்மீது வெறுப்புக் கிடையாது. நீங்கள் செய்த இந்தப் பெரிய தான தருமங்கள் நான் நேரிலே பார்த்த அந்தத் தானத்துக்கு ஈடாகமாட்டா. அந்த ஏழைப் பிராமணர் உங்களிலும் பார்க்கச் சிறந்த கொடையாளி. அதன் பயனாக அவர் தன் மனைவி, மகன், மருமகள் ஆகியவர்களுடன் தேரில் ஏறிச் சுவர்க்கம் சென்றார். நான் இதை நேராகக் கண்டேன். அந்தக் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:

"உங்கள் யுத்தம் நடப்பதன்முன் குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராமணர் இருந்தார். கீழே உதிர்ந்து கிடக்கும் தானியத்தைப் பொறுக்கி அவரும், அவரது மனைவி, மகன், மருமகள் ஆகியவர்களும் உணவு பெற்று வந்தார்கள். ஒரு நாளைக்கு மத்தியானத்தின்மேல் ஒரு முறை மட்டும் உண்ணுவார்கள். சில நாட்களில் போதிய தானியம் கிடைக்காது. அந்த நாட்களில் உபவாசமிருந்து, மறுநாள், மத்தியானத்தின்மேல் உண்ணுவார்கள். ஒரு நாள் கிடைத்ததை மறு நாளைக்கு வைத்துக்கொள்ள மாட்டார்கள். இது அவர்களுடைய விரதம்.

ஒருமுறை நாட்டில் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. ஜனங்கள் உணவின்றிக் கஷ்டப்பட்டார்கள். மழை

இல்லாமல் போனதினால் வயல்களில் தானியம் சிந்திக் கிடக்கவில்லை. அதனால் தொடர்ந்தாற்போலப் பல நாட்களுக்கு அந்தப் பிராமணருடைய குடும்பம் பட்டினியாக இருக்க நேரிட்டது. ஒரு நாள் வெயிலிலே திரிந்து கஷ்டப்பட்டு ஒருபடிச் சோளம் சேகரித்துக் கொண்டு வந்தார்கள். அதை மாவாக அரைத்து, நான்கு சமபங்குகளாகப் பிரித்து வைத்துவிட்டு, ஸ்நாநம் முதலியவற்றை முறைப்படி செய்தபின் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

அந்தச் சமயத்தில் பசியினால் வாடிக் களைத்த பிராமணர் ஒருவர் அங்கே வந்தார். அதிதி ஒருவர் வந்தாரே என்று மகிழ்ந்து அவர்கள் அவரை உபசரித்து உட்காரச் சொன்னார்கள்.

"பிராமணரே! நான் ஏழை. இந்த மாவு நல் வழியிலே சம்பாதிக்கப்பட்டது. ஏற்று உண்ண வேண்டும்" என்று அந்தப் பிராமணர் தன் பங்கான காற்படி மாவை அவருக்குக் கொடுத்தார். அதிதியான பிராமணர் அதை உண்டார்.

ஆனால் அவருக்குப் பசி தீரவில்லை. கொடுத்த மாவை உண்டபின்பு திருப்தியடையாத பசிப்பார்வையுடன் அவர்களைப் பார்த்தார். அதைக் கண்டு பிராமணர் வருத்தமடைந்தார். அதைக் கண்ட அவரது மனைவி தன்னுடைய பாகத்தையும் அதிதிக்குக் கொடுக்க முன் வந்தாள். பிராமணர் தடுத்தும் அவள் கேட்கவில்லை. தன்னுடைய பாகத்தையும் அதிதிக்குக் கொடுப்பித்தாள்.

அப்பொழுதும் அதிதிக்குப் பசி தீரவில்லை. அதைக்கண்டு பிராமணர் மேலும் வருந்தினார். அவருடைய மகனும் தன்னுடைய பங்கைக் கொடுக்க முன் வந்தான். பிராமணர் அவனைத் தடுத்தார். முடியவில்லை.

ஆகவே அவனுடைய பங்கையும் வாங்கி அதிதிக்குக் கொடுத்தார்.

மூன்று பங்குகளை உண்டபோதும் அதிதி பசியால் வருந்துபவர் போலவே காணப்பட்டார். எல்லாரும் வருத்தமடைந்தார்கள். பிராமணரின் மருமகளும் தன் பங்கைக் கொடுத்தாள். எல்லாரும் தமது பங்குகளைக் கொடுத்தபோது தானும் கொடுக்கவேண்டும் என்று பிடிவாதமாக நின்றாள். பிராமணர் அவளுடைய பங்கையும் வாங்கி அதிதிக்குக் கொடுத்தார்.

அதன் பிறகே அதிதியானவர் பசி நீங்கிச் சந்தோஷமடைந்தார். "பரிசுத்தமாகவும், சக்திக்குத் தக்கவாறும் கொடுக்கப் பட்ட இந்தத் தானத்தினால் மகிழ்ச்சி அடைந்தேன். உம்மையும், உமது குடும்பத்தையும் தரிசிக்க ஆகாயத்தில் சுவர்க்க வாசிகள் வந்து கூடி நிற்கிறார்கள். உம்முடைய உயர்ந்த தானத்துக்குப் பெரிய பெரிய யாகங்களும் சமமாக மாட்டா. அதன் பலனாக உங்கள் நால்வரையும் அழைத்துச் செல்லச் சுவர்க்கத்திலிருந்து விமானம் வருகிறது. அதில் ஏறிச் சுவர்க்கம் செல்லுங்கள்" என்று கூறி அதிதி மறைந்து விட்டார்.

இப்படி அந்தப் பிராமணருடைய கதையைச் சொன்ன பிறகு கீரி மீண்டும் சொல்ல ஆரம்பித்தது.

"பக்கத்தில் இருந்த எனது தலை அந்த மாவின் வாசனையினால் பொன் மயமாக மாறிவிட்டது. பிறகு சிந்திக் கிடந்த மாவின் மேல் புரண்டேன். எனது பாதி உடல் பொன் மயமாயிற்று. மற்றப் பாதியையும் பொன் மயமாக்க விரும்பித் தானங்கள் செய்யும் இடங்களுக்குச் சென்றேன். தருமராஜன் அஸ்வமேத யாகஞ் செய்கிறார் என்று அறிந்து வந்தேன். ஆனால் எனது உடல் முழுதும் பொன் மயமாக வில்லை. அத

ஞல் தான் அந்த ஒரு படி மாவுக்கு உங்கள் யாகம் சமமாகாது என்றேன்" என்று சொல்லிவிட்டுக் கீரி மறைந்தது.

[வியாஸர் விருந்து].

அஸ்வமேத யாகம் உபவாசம்

விஞக்கள் :

1. தருமராஜன் எவ்விதமான யாகம் செய்தார் ?
2. கீரி சொன்ன கதை என்ன ?
3. தருமராஜன் செய்த யாகத்திலும் அந்த ஏழைப் பிராமணரின் தானம் சிறந்ததா ? ஏன் ?

29. பாடொரு புறம் பயனெரு புறம்

நீர், நெருப்பு, மிருகங்கள், பகைவர், விஷ ஜந்துக்கள், ஆயுதங்கள் என்ற பலவற்றிஞலும் மனிதர்கள் மரணமடைகிருர்கள். அகால மரணத்தைத் தடுப்பதற்காக ஆதியிலிருந்தே மனிதர்கள் வைத்திய முறைகளேக் கையாண்டார்கள். இப்பொழுது கையாளப்படும் சத்திர சிகிச்சை முறைகளும் அப்பொழுது கையாளப்பட்டன. மண்டை யோட்டைத் துளேத்துச் செய்யப்படும் சத்திர சிகிச்சை முறை நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பே கையாளப் பட்டிருக்கிறது என்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகிறது.

இக்காலத்தில் கையாளப்படும் சத்திர சிகிச்சை முறை மிகவும் விந்தையானது. அதனல் அதிக பலன் ஏற்படுகிறது. வியாதியஸ்தன் வேதனேயைச் சிறிதும் உணராத முறையில் சிகிச்சை செய்ய முடிகிறது. சத்திர சிகிச்சையிஞல் ஏற்படும் புண்ணேச் சீக்கிரத்தில் ஆற்றவும் சிறந்த முறைகள் இருக்கின்றன. மேல்நாட்டு வைத்திய நிபுணர்களுக்கு உலகம் முழுவதும் அதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

முற்காலத்தில் சத்திர சிகிச்சை என்றால் மரண வேதனை என்றே கருதினர்கள். வைத்தியனும் நோயாளியும் எத்தனையோ கஷ்டங்களுக்கு உள்ளா வார்கள். நோயாளியைக் கயிற்றினால் கட்டி நான்கு பேர் அழுத்திப் பிடித்துக் கொள்ள வைத்தியன் சிகிச்சை செய்யவேண்டி இருந்தது. நோயாளி கூக் குரலிட்டுக் கதறுவான். உடம்பை உதறுவான். இதனால் சத்திர சிகிச்சை மிகுந்த ஆபத்தாக முடிந்து விடவும் கூடும் ; எதிர்பார்ப்பதற்குக் குறைந்த பலனைத் தான் பெற முடியும்.

சில நோயாளிகளின் உயிரைக் காப்பதற்குச் சத்திர சிகிச்சை மிகமிக அவசியம். ஆனால் அச்சிகிச்சை யின் போது ஏற்படும் வேதனையை எவ்விதம் குறைக்க லாம்? மயக்கத்தைத் தரும் மதுபானங்களைக் கொடுத்து நோயாளிக்கு மயக்கத்தை உண்டு பண்ணினர்கள். மந்திரத்தால் மயக்கமுண்டாக்க முயன்றார்கள். மெஸ்மர் என்பவர் மனோசக்தியால் நோயாளியை உறங்க வைத்துச் சிகிச்சை செய்யலாம் என்றார். ஆனால் அதை நிரூபித்துக் காட்டவில்லை.

இங்கிலாந்தில் ரஸாயன ஆராய்ச்சி செய்த சேர் ஹம்ப்ரி டேவி என்ற விஞ்ஞானி 'நைட்ரஸ் ஒக்ஸைட்' என்னும் வாயுவைப் பற்றி ஆராய்ந்த போது அதன் அபூர்வமான குணம் ஒன்றைக் கண் டார். அந்தக் காற்றைத் தொடர்ந்து சில தடவை சுவாசிப்பதால் மயக்கம் உண்டாவதையும் அதனால் நோயாளியின் வேதனை குறைவதையும் அவர் கண்டார். சத்திர சிகிச்சையில் அந்த வாயு பயன் படலாம் என்று அவர் வைத்தியர்களுக்குக் கூறினர். ஆனால் அவர் கள் அதைக் கவனிக்கவில்லை.

அவரது அந்த அபிப்பிராயம் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் இருந்த ஹாரஸ் வெல்ஸ் என்னும் ஒரு பல் வைத்தியருடைய மனத்திலே தாக்கிற்று. அவர் அரைகுறைப் படிப்பாளி. வருமானம் மிகவும் குறைந்தவர். நோயாளிகளுக்கு மயக்கமூட்டிச் சிகிச்சை செய்வதால் தனக்கு நல்ல வருமானம் ஏற்படலாம் என்று நினைத்தார். முதல் முறை நைட்ரஸ் ஒக்ஸைடைத் தானே சுவாசித்துத் தன் பல் ஒன்றைப் பிடுங்குவித்தார். அப்பொழுது அவருக்கு வேதனையே தோன்றவில்லை. அதைக் கண்டு தன்னிடம் வரும் நோயாளருக்கு அந்தச் சிகிச்சை முறையைக் கையாள ஆரம்பித்தார். அதில் அவருக்கு நம்பிக்கையும் ஏற்பட்டது.

தனது நண்பனான மார்ட்டன் என்னும் பல் வைத்தியனிடம் வெல்ஸ் இதைச் சொன்னார். பல வைத்திய நிபுணர்களின் மத்தியில் தன் புதிய சிகிச்சை முறையைக் காட்ட விரும்புவதாகக் கூறினார். அதனால் தனக்குப் பணமும் புகழும் கிடைக்கும் என எண்ணினார்.

அவரது நண்பனான மார்ட்டன், ஜாக்ஸன் என்பவரைக் கொண்டு, வெல்ஸின் நூதன சிகிச்சை முறையைக் காட்டி நிரூபிக்க ஒரு கூட்டத்தைக் கூட்டுவித்தான். ஆனால் பாவம், வெல்ஸ் அன்றைக்குச் செய்த சிகிச்சையில் வெற்றி பெறவில்லை. அதனால் வெல்ஸ் அவமானமடைந்தார். வைத்தியத் தொழிலை வெறுத்து, பக்ஷிகளை வளர்த்து விற்கும் தொழிலை ஆரம்பித்து விட்டார்.

வெல்ஸின் எண்ணங்களை ஜாக்ஸன் மறந்து போய் விடவில்லை. அதையிட்டு ஆலோசித்தான். அவரது சிகிச்சை முறையில் சில திருத்தங்களைச் செய்து, அதைக் கையாளும்படி மார்ட்டனுக்குச் சொல்லிக்

கொடுத்தான். மார்ட்டன் தன்னிடம் வரும் நோயாள ருக்கு அந்த முறையைக் கையாண்டு சிகிச்சை அளித் தான். அந்தச் சிகிச்சை முறையைப் பற்றிய நுணுக் கங்களைத் தன் அநுபவ மூலம் கண்டான்.

பிறகு பெரிய கூட்டம் ஒன்றிலே, கழுத்தில் பிளவை ஏற்பட்ட நோயாளி ஒருவனைத் தனது சிகிச்சைக்கு ஆளாக்கிக் காட்டினான். நோயாளி வேதனையின்றிச் சிகிச்சை பெற்றதைக் கண்டு ஜனங்கள் மார்ட்டனைப் புகழ்ந்தார்கள். அந்தப் புதிய முறையை ஆரம்பித்து வைத்த வெல்ஸைப் பற்றி ஒருவருமே நினைக்கவில்லை.

இதைக் கண்டு வெல்ஸ் வருத்தமடைந்தார். அந்தச் சிகிச்சை முறையைத் தான் கண்டு பிடித்தும் தனக்குப் பலன் ஏற்படவில்லையே என்று பச்சாத்தாபப் பட்டார்.

பிரான்ஸ் முதலிய தேசங்களுக்குச் சென்று உண்மைச் சம்பவங்களைச் சொன்னார். அதை ஒருவரும் நம்பவில்லை. வெல்ஸ் மனம் வருந்தி, நோய்வாய்ப் பட்டு இறந்தார்.

அதே சமயத்தில் அந்தப் புதிய முறையைக் கண்டு பிடித்ததற்காக ஜாக்ஸனுக்குப் பிரான்ஸ் விஞ்ஞான சங்கத்தார் பெரிய பரிசு ஒன்றைக் கொடுத்தார்கள். மார்டன் தனது சிகிச்சை முறையை வைத்தியர்களுக்கு விற்றுக் கோடீஸ்வரன் ஆனான்.

பரிசுகளுக்கு உரியவன் ஒருவன். பணத்தையும் புகழையும் அடைந்தது வேறு யாரோ!

[தழுவல் : ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி அவர்களின் கட்டுரை.]

அகால மரணம் பச்சாத்தாபம்

வினுக்கள் :

1. சத்திர சிகிச்சை என்ருல் என்ன? அது அவசியமா?

2. முற்காலத்திலும் இக்காலத்திலும் கையாளப்படும் சத்திர சிகிச்சை முறைகளில் உள்ள வேற்றுமைகள் என்ன?

3. சத்திர சிகிச்சை சுலபமானது எதனுல்?

4. சத்திர சிகிச்சையில் புதிய முறையைக் கண்டு பிடித்தது யார்? அவர் அதனுல் பயனடையாதது ஏன்?

30. பொன் மொழிகள்

1. எவனெருவன் தனது செல்வத்தைக் கொண்டு ஓய்வு, சுதந்திரம், அரோக திடகாத்திரம் ஆகிய மூன்றையும் பெறுகிருனே அவன் தான் உண்மையான பணக்காரன். [ரூஸோ]

2. பணக்காரர்களுடைய நிலைமை எவ்வளவுக் கெவ்வளவு அபிவிருத்தி அடைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு உழைப்பாளிகளின் நிலைமை கேவலமடைகிறது. [மார்க்ஸ்]

3. அறியாமையைத் தவிர்த்து வேருேர் அடிமைத் தனம் இல்லை. சுதந்திரம் என்பது அறிவின் குழந்தை. [இங்கர்சோல்]

4. தனக்கு இன்ன விதமான உரிமை தேவை என்று கூறி அதே உரிமையை மற்றவர்களுக்கு அளிக்க மறுக்கும் ஒருவன் இந்த உலகில் இருப்பானுகில் அவன் காட்டுமிராண்டியின் நிலைக்குச் சமீபத்திலேயே வசித்த வனுகிருன். [இங்கர்சோல்]

5. எந்த ஒரு வீட்டில் ஒரு புத்தகசாலை இருக்கிறதோ அந்த வீட்டில் தான் உயிர் இருக்கிறது. [பிளாட்டோ]

6. அன்பென்பது ஒரு நாட்டுக்கு மட்டும் சொந்தமானதல்ல. பெருந்தன்மையென்பது ஒரு ஜாதிக்கு மட்டும் உரிமைப் பொருளல்ல. அன்பும் கருணையும் நிறைந்த பலர், ஒவ்வொரு யுகத்திலும் எல்லா நாடுகளிலும் தோன்றியிருக்கிறார்கள். [இங்கர்சோல்]

7. நாம் வேண்டுவதென்ன? இரத்தத்தில் பலம், நரம்புகளில் வலிவு, இரும்பு போன்ற தசை நார்கள், எஃகையொத்த நரம்புகள்--இவையே நமக்கு வேண்டும். தளர்ச்சி தரும் கசிவுள்ள கொள்கைகள் நமக்குத் தேவையில்லை. [விவேகானந்தர்]

8. மிகவும் மேல் நிலையில் இருப்போரும், மிகவும் தாழ்நிலையிலிருப்போரும் எல்லோரும் ஒருங்கே செய்ய வேண்டிய கடமை ஒன்றுண்டு. அதாவது, ஓயாமல் தம்மைத் திருத்திச் செம்மைசெய்தல். [கொன்பியூஷியஸ்]

9. தேவ யாத்திரை செய்வோன் எப்போதும் அதைரியப் படலாகாது. இஷ்ட தேவதையின் அழகை ஒரு லக்ஷ வருஷம் பாடுபட்டுக் காணுவிடின் அப்போதும் அதைரியப் படலாகாது. [மகாஉல்லா]

10. பிறர் தோஷங்களைப் பற்றித் தர்க்கிப்பதிலே பொழுது செலவிடுவோன், பொழுதை வீணே கழிக்கிறான். [பரமஹம்ஸர்]

11. மனிதன் பண்பாடு பெற வேண்டுமானால் அவனுக்குக் கல்வி அவசியமானது. [ரூஸோ]

12. நன்மை செய்வதற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது. [நாவலர்]

13. நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும். பயில்வோமாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லார் ஆவோம். [நாவலர்]

14. அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள் [நாவலர்]

15. எப்பொழுதும் சந்தோஷமாக இரு. பிறரால் வரும் சாந்தியையாவது, பிறருடைய உதவியையாவது தேடாதே. மனிதன் தன் பலத்தைக் கொண்டே தானாகவே நிமிர்ந்து நிற்கவேண்டும். [மார்க் அரோலியர்]

16. அலைகள் ஓயாமல் மோதும் கற்பாறை போன்று இரு. அது உறுதியாய் நின்று தன்னைச் சூழ்ந்துள்ள ஜலத்தின் வேகத்தை அடக்குகிறது. [மார்க் அரோலியர்]

17. அதிர்ஷ்டசாலி என்றால் நல்லதிர்ஷ்டத்தைத் தேடிக் கொண்டவன் என்றே பொருள். 'அதிர்ஷ்டம்' என்பது நல்லெண்ணங்கள், நல்லுணர்ச்சிகள், நற் செய்கைகளேயாம். [மார்க் அரோலியர்]

18. குற்றம் செய்யும் பொழுது குற்றம் செய்கிறோம் என்ற அறிவு போய்விட்டால், அதன் பின் உயிர்வாழ்வ தால் என்ன பயன்? [மார்க் அரோலியர்]

19. அறமே ஆற்றல் என்பதை நம்புவோமாக. அந்த நம்பிக்கையில் நாம் அறிந்த கடமையைச் செய்யத் துணிவோமாக. [ஆபிரகாம் லிங்கன்]

20. ஒரு பொழுதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்றுண்டு. நாம் செய்யும் நற் செயலே அது. [மேட்டர் லிங்]

21. நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒரு நாளும் காணமுடியாது. [பர்க்]

22. உலகத்தார் நாடும் பெருமைகள் வேண்டேன். அறிவதொன்றே என் விருப்பம். [சோக்கிறற்றீஸ்]

23. முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம்.

பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். [பிஷப் பார்க்லி]

24. ஆண்டவன் இலன் எனினும் அறநெறி நிற்போம் என்பவரே அவன் அடியவராவர். [ரூபேர்ட் ப்ரௌனிங்]

25. மனிதனுடைய இதயம் ஊமையாய் இருந்தாலன்றிக் கடவுள் ஒரு நாளும் செவிடாய் இருப்பதில்லை. [குவார்ல்ஸ்]

26. அறம் விரும்பு; அதுவே வீடு. [மில்ற்றன்]

27. நூறு விதமாய்க் கூறினாலும் மதம் ஒன்றுதான் உண்டு. [பேர்னட் ஷோ]

28. தாழ்ந்த லட்சியத்தில் ஜெயம் பெறுவதைவிட உயர்ந்த லட்சியத்தில் தோல்வியுறுவதே சிலாக்கியம். [ரூபேர்ட் ப்ரௌனிங்]

29. எப்போதும் தன்னம்பிக்கையை வளருங்கள். தீரச் சிறுவர்களே! நீங்களனைவரும் அரும்பெரும் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள். [விவேகானந்தர்]

30. மனிதர்கள் மனிதர்களாக வேண்டும். மற்ற எல்லாம் தாமே வந்து சேரும். பலம், வீரியம், நம்பிக்கை, மாசற்ற உண்மை—இவையுடைய இளைஞர்கள் தேவை. இத்தகையோர் நூறுபேர் இருந்தால் உலகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணிவிடலாம். [விவேகானந்தர்]

31. ஒவ்வொருவரிடத்தும் பொறுமையைக் கைக்கொள். ஆட்சி செலுத்த விரும்பாதே. எவன் சிறந்த ஊழியம் செய்ய வல்லவனோ அவனே அரசரில் சிறந்தவன் ஆவான். [விவேகானந்தர்]

32. நமது பெண்கள் திக்கற்றவர்களாகவும், பிறரை நம்பி வாழ்பவர்களாகவும் நீண்ட காலமாகப் பயிற்சி

செய்யப்பட்டு வந்திருக்கின்றனர். இதன் பயனாக, மிகச் சிறு அபாயம் அல்லது துன்பம் நேர்ந்துவிட்டாலும் அவர்கள் கண்ணீர் பெருக்குவதற்கே தகுந்தவர்களாகி விட்டார்கள். [விவேகானந்தர்]

33. ஐயோ! பேயை அடக்குவதினும் எழுப்புவது எளிது. [காரிக்]

34. எல்லா உடைமைகளிலும் ஞானமே அழியாத தாகும். [சோக்கிறற்றீஸ்]

35. வாழ்வு யோசிப்பவனுக்கு இன்ப நாடகம்; உணர்பவனுக்குத் துன்ப நாடகம். [வால்ப்போல்]

36. கண் குருடு என்று இரங்குவது போலவே அறிவு சூனியம் என்பதற்கும் இரங்க வேண்டும். [செஸ்டர்பீல்ட்]

37. ஒவ்வொருவனும் பிழை செய்யக் கூடியவனே. ஆனால் மூடனைத் தவிர வேறு யாரும் பிழையை விடாமல் பிடித்துக் கொள்ளார். [ஸிஸரோ]

38. இன்று உன்னால் கூடியமட்டும் நன்றாய்ச் செய். நாளை அதனினும் நன்றாய்ச் செய்யும் ஆற்றல் நீ பெறக்கூடும். [நியூட்டன்]

செய்யுட் பாகம்

சுயோதனன் சபையில் பாஞ்சாலி

சகுனியோடு ஆடிய சூதில் தருமன் தன் தேவியையுந் தோற்றுவிட்டான். உடனே துரியோதனனுடைய கும்பல் துள்ளிக் குதித்தது. கடைசியில் துரியோதனன் இச்சைப்படி பாஞ்சாலியைச் சபைக்கு அழைத்துவரத் தம்பி துச்சாதனன் சென்றான். சென்றவன் பாஞ்சாலியைப் பார்த்து, “சபைக்கு வா, அண்ணன் அழைக்கிறான்” என்று மிருகமாகவே நின்று நியாயம் பேசினான். அப்பொழுது அமைதியோடு,

பாஞ்சாலி:

'அச்சா, கேள், மாத விலக்காதலா லோராடை
தன்னி லிருக்கின்றேன். தார் வேந்தர் பொற்சபைமுன்
என்னை யழைத்த லியல்பில்லை. அன்றியுமே,
சோதரர் தந் தேவி தனைச் சூதில் வசமாக்கி,
ஆதரவு நீக்கி, யருமை குலைத்திடுதல்,
மன்னர் குலத்து மரபோ காண்? அண்ணன் பால்
என் னிலைமை கூறிடுவாய், ஏகுக நீ' என்றிட்டாள்.
'கக்' 'கக்' கவென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
கையினாற் பற்றிக் கர கரனெத் தானிழுத்தான்.
'ஐயகோ' வென்றே யலறி யுணர் வற்றுப்
பாண்டவர் தந் தேவியவள் பாதியுயிர் கொண்டு வர,
நீண்ட கருங் குழலை நீசன் கரம் பற்றி [ராய்
முன்னிழுத்துச் சென்றான். வழி நெடுக, மொய்த்தவ
'என்ன கொடுமை யிது' என்று பார்த்திருந்தார்
ஊரவர் தங் கீழ்மை யுரைக்குந் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்கா மிள வரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவ ளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
பேரழகு கொண்ட பெருந் தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையைக் கவர்ந்து போய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபை தனிலே
கூடுதலு மங்கே போய்க் 'கோ'வென் றலறினாள்.
விம்மி யழுதாள் :—'விதியோ கணவரே,
அம்மி மிதித்தே யருந்ததியைக் காட்டி யெனை
வேதச் சுடர்த் தீமுன் வேண்டி மணஞ்செய்து;
பாதகர் முனிந் நாட் பரிசழிதல் காண்பீரோ?'

என்றாள். விஜயனுட னேறு திறல் வீமனுமே
குன்று மணித் தோள் குறிப்புடனே நோக்கினர்.
தருமனு மற்றுங்கே தலை குனிந்து நின் றிட்டான். [யில்
பொருமி யவள் பின்னும் புலம்புவாள் :—' வான் சபை
கேள்வி பலவுடையோர், கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்,
மேலோரிருக்கின்றார், வெஞ்சின மேன் கொள்கிலரோ ?
வேலோ ரனை யுடைய வேந்தர் பிணிப் புண்டார்.
இங்கிவர் மேற் குற்ற மியம்ப வழியில்லை.
மங்கியதோர் புன் மதியாய்! மன்னர் சபை தனிலே
என்னைப் பிடித்திழுத்தே யேச்சுக்கள் சொல்லுகிறாய்.
நின்னை யெவரும் " நிறுத்தடா " என்பதிலர். [வரை
என்செய்கேன் ?' என்றே யிரைந் தழுதாள். பாண்ட
மின்செய் கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினள்.
மற்றவர் தா மூன்போல் வாயிழந்து சீர்குன்றி
பற்றைகள் போல் நிற்பதனைப் பார்த்து, வெறிகொண்டு,
' தாதியடி தாதி!' எனத் துச்சாதன னவளைத்
தீதுரைகள் கூறினன். கர்ணன் சிரித்திட்டான்.
சகுனி புகழ்ந்தான். சபையினோர் ? வீற்றிருந்தார் !
தகுதியுயர் வீட்டுமனுஞ் சொல்லுகிறான் : ' தையலே,
சூதாடி யுன்னை யுதிட்டிரனே தோற்று விட்டான்.
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி. தொழில் வலியால்,
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்ற மென்று சொல்லுகிறாய். கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீ சொல்லுவது
நீத மெனக் கூடும் ; நெடுங் காலச் செய்தி யது !
ஆணொடு பெண் முற்று நிகரெனவே யந்நாளில்
பேணிவந்தார். பின்னாளி லஃது பெயர்ந்து போய்,

இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர். ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்.
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.
தன்னை யடிமையென விற்ற பின்னுந் தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கை யிங்கு பார்த்திடிலோ,
கல்லு நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்.
செய்கை யநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைகு நெறியும் வழக்கமு நீ கேட்பதனால்,
ஆங்கவையு நின்சார்பி லாகா வகையுரைத்தேன்.
தீங்கு தடுக்குந் திறமிலேன்', என்றந்த [ருள் :—
மேலோன் தலைகவிழ்ந்தான். மெல்லியளுஞ் சொல்லுகி
'சால நன்கு கூறினீ ரையா, தருமநெறி
பண்டோ ரிராவணனும் ஸீதைதன்னைப் பாதகத்தாற்
கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின், கூட்ட
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே, [முற
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்,
"தக்கது நீர்செய்தீர்; தருமத்துக் கிச் செய்கை
ஒக்கும்" என்று கூறியுகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந் தின்னும் சாத்திரங்கள்
மாய முணராத மன்னவனைச் சூதாட [யோ?
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மை
முற்படவே சூழ்ந்து முடிந்ததொரு செய்கையன்றோ?
மண்டபநீர் கட்டியது மா நிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ? பெரியவசை கொள்வீரோ? [டாள்
கண்பார்க்க வேண்டும்' என்று கையெடுத்துக் கும்பிட்
அம்பு பட்ட மான்போ லழுது துடிதுடித்தாள்.

"பாரதி"

நன்னெறி

காப்பு

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து. (1)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க—ஈசற்கு
நல்லோ னெறிசினையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ வெறுப்பு. (2)

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க—தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து. (3)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (4)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். (5)

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கலுன்
கண்ணிரண்டு மொன்றையே காண். (6)

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். (7)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. (8)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. (9)

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்

கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று. (10)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பிற்
சுழற்றுங்கோல் கற்றூணைச் சூறுவளி போய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு. (11)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத லுனே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (12)

பெருக்கமொடு சுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்பமொடு கொடுப்பர் மேலோர்—சுரக்கும்
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர். (13)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு. (14)

இல்லானுக் கன்பிங் கிடம்பொருளேவன் மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (15)

தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல். (16)

எந்தைநல் கூர்ந்தா னிரப்பவர்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. (17)

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (18)

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (19)

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்

மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (20)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. (21)

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கோ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. (22)

பகர்ச்சி மடவார் பயிலகோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்—நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே. (23)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. (24)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமது கன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமோவண் பொருள். (25)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு. (26)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதுசுவைகா விற்கு
விளைக்கும் வலியன தா மென்று. (27)

முனிவினு நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. (28)

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். (29)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனித்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்

வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. (30)
பேரறிஞர் தாக்கும் பிறர்துயரக் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாக்குங் கடிது. (31)
பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். (32)
எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். (33)
அறிவுடையா ரன்றி யதுபெறுர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (34)
கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (35)
தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். (36)
பெரியோர்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும்—தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து. (37)
நல்லோர் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லோர் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி லென்னாகிப் போம். (38)
கற்றறியார் செய்யுங் கடுகட்புத் தரங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடி
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம். (39)
பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். (40)

89382
சென்னை 600 005

1252/450